தென்றல்

ஆசிரியர்: கண்ணதாசன்.

ாடு (இலங்கை உட்பட) விலை இரண்டணு | வெளிநாடு மூன்றணு | அலுவலகம்: 'தென்றல்' சென்னை-6.

ர் 2 | சென்னை 28—2—56 செவ்வாய்க்கிழமை இதழ் 37

ாழுந்திருங்கள்! கலந்து போங்கள்!'

ருக்கும் பிப்ரவரி 20-ந் தேதி போதுவேலை நிறுத்தம் ரமாக - ஆனுல், வெறி சித்தலைகாட்டாமல், அருமை னல், அமைதி கெடாமல், குறையாமல், பலாத்காரம் டாமல், சென்னை சென்னை தான், பம்பாய் அல்ல-என்று பம்பாயும் அறியும்படி நடைபெற வேண்டும்"-என்று திராவிடர் தலைவர் அறிஞர் அண்ணு அவர்கள் சர்வ கட்சிக் கூட்டணியின் சார்பில் பத்து நாட்களுக்கு முன்பு சென்னைப் போதுக் கூட்டமோன்றில் கேட்டுக் கோண்டதற்கு, தமிழகம் தலை தாழ்த்தி தலைவர்களின் கட்டளையைக் கௌரவித்துக் காட்டியது. தமிழ் நாட்டில் நுழைந்த 'பிப்ரவரி 20'ஐ பம்பாய் மட்டுமல்ல, டில்லிக்கும் தெரியும் வகையில் தமிழகம் நடத்திக்காட்டி, நம்மை நாத்தமும் பேறத் திட்டுவோரிடமும் 'சபாஷ்' பட்டம் பெற்றுவிட்டது.



பிப்ரவரி 20.- தூங்கும் சென்னையில் துரைத்தனத்தார் நடமாட்டம்!

★ ஆள் சேர்க்கவும் வகையற்று அடைகாத்துக் கிடக்கும் சர்க்கார் பஸ்கள்

★ தமிழர்களின் கண்ணியத்தில் நம்பிக்கை வைக்காத நீலவாகனங்கள்

போட்டோ: தென்றல் திரை சாமுவேல்

அத்தனை கட்சியுமா? அய்யோ! எந்த மூலைக்கு சென்னை?-அலறித் துடித்தனர் ஆட்சியாளரும் அவர்களை அண்டிப் பிழைப்போரும். என்ன நடந்துவிட்டது? நகரமே தூங்கிக்கிடக்கையில், 'எனக்குத் துரோகப்பட்டம் கிடைத்தால் பரவாயில்லை' என்று மோட்டார்களை இயக்குவித்த டி. வி. எஸ். போன்ற முதலாளிகளைக்கேட்டால்போதுமே, தமிழர்களின் கண்ணியத்திற்கும் கட்டுப்பாட்டுக்கும்! ஆனுல் பிப்ரவரி 20 ஐ அலட்சியம் செய்தவர்கள், தமிழ்த் தலைவர்களின் வேண்டுகோளையும், தமிழகம் நடந்து கோண்ட கட்டுப்பாடான முறையையும் தங்களுக்குச் சாதகமாக்கிக் கோண்டு, 'நாங்கள் கடையைத் திறந்துதான் வைத்திருந்தோம். எங்களிடம் ஒன்றும் பலிக்கவில்லை' என்று இரண்டொருவர் மேதாவிப் பேச்சுப் பேசியதும் தமிழ்மக்கள் காதில் விழாமலில்லை. அன்று ஜன சக்தி சத்தியவிளிம்பிலிருந்து ஒரு அணு பிறண்டிருந்தால் உழைப்பின் உருவங்களை அலைமோதப் பெற்றிருந்த 'பிப்ரவரி இருபதுக்'கு-முறுக்கேறி ரத்தினம்போல் சிவப்பேறியிருந்த அந்தக் கனத்த தேதியின் அணல் மூச்சுக்கு. அன்றையதினம் துரோகம் புரிந்தோர் கதி என்னவாகியிருக்கும்? எழுதத் தரமன்று! எடுத்துரைக்கத் தகாது!

'ஹர்த்தாலன்று போதுமக்கள் ஒத்துழைக்கக்கூடாது' என்று கேட்டுக்கோண்ட 'போலித்தியாகி'களின் முகத்திலே கரி பூசும் வகையில், போதுமக்கள் என்பார் யார்? அவர்கள் எந்தப் பக்கம்? என்பதை பிப்ரவரி இருபதன்று திரண்டெழுந்த மக்கள் சக்தி உணர்த்திக் காட்டியது? சென்னையின் பேரிய சாலைகளில் பிரும்மாண்டமான மாடி வீடுகளைக் கட்டிப் பெருமூச்சு விட்டுக் கோண்டிருந்தவர்களுக்கேல்லாம் அன்று அந்தப் பால்கனிகள் பெரிதும் பயன்பட்டன. கண்பட்ட தோலைவிலிருந்து. நேருவின் தீர்ப்பால் இதயம் புண்பட்டுக் சிளம்பிய தமிழர் கூட்டம் அணிவகுத்து

— 10-ம் பக்கம் —

ஒரேயடியாக ஓடிக்கொண்டேயிருந்த நீராவி வண்டி காலை பத்தரை மணியளவில் ஒரு நிலையம் வந்தடைந்தது. காலை உணவு அருந்தலாமென நண்பர்களுடன் வண்டியிலிருந்து இறங்கினுல்...பின்வருமாறு பேச்சு நடைபெற்றது. உடன் வந்தோரில் ஒருவர், ஐந்தாண்டுத் திட்டத்தில் ஏராளமாகச் செலவு செய்கிருர்கள். எல்லா விதத்திலும், யாருக்கும் அரசினர் உதவி செய்கின்றனர். இருந்தும் ஏன் இங்கு மக்களும் அவர் தம் சூழ்நிலையும் பாழான நிலைமையிலிருக்கிறது என்ருர்.

அப்பப்பா இவர்களும் மனிதர்களாகவே வாழ்வதாக எண்ணிக் கொள்கிருர்களே. சாப்பிட்டுக் கொண்டே பக்கத்திலேயே புளிச்சுப், புளிச்சென்னு எச்சிலை உமிழ்ந்துகொண்டு உணவருந்துவது எவ்விதத்திலும் அருவருக்கத்



கட்டுரையாளர் தோழர் உ. பில்லப்பன் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த மாணவச் செல்வங்களில் ஒருவர், கடந்த நவம்பரில் சென்னையில் நடைபெற்ற திராவிட மாணவர் முன்னேற்றக் கழக மாநில மாநாட்டுச் செயலாளராகப் பணியாற்றியவர். பச்சையப்பன் கல்லூரியில் பி. ஏ. ஹானர்ஸ் படிக்கும் இவர், டிசம்பர் திங்களில் டில்லியில் நடைபெற்ற பொருட்காட்சிக்குப் போனபோது நேரில் கண்ட காட்சிகளை வைத்து ஒரு பிரயாணக் கட்டுரையாகத் தீட்டித் தந்திருக்கிருர். வடநாடு—தென்னுடு ஏற்றத்தாழ்வை இந்தக் கட்டுரையின் மூலம் நன்கு விளக்குகிருர்.

(ஆ—ர்)

போதும் கிடைக்கவில்லை. மறுபுறம் சென்றேன். தோல்வியே. ஒன்றும் புரியாத நிலையில் திரும்பிப் பார்த்

தடைந்தோம். இடையிலே எங்கெங்கினும் புதுப்புது ஏற்பாடுகள். மதுரா மாவட்டம்! நினைவிருக்கட்டும்

சமாதி கண்ணீர்விட்டுக் கதறியழுதென்று. நண்பகலுக்குமேல் பிர்லா மந்திர் - அதுதான் லட்சுமிநாராயணன் கோயில். இந்தியாவிற்கு வரும் வெளிநாட்டினர் நாடு முழுமையும் சுற்றி, நம் மடமையையும், அறிவற்ற பிற்போக்கான நிலையையும் கண்டறியவேண்டாமென நல்லெண்ணங்கொண்ட பிர்லா இதைக் கட்டியுள்ளார். பிர்லா கட்டியுள்ளார் என்றதும் டால்மியா ஒரு சில ஆண்டுகளுக்குமுன் ஒரு யாகம் நடத்தினரே-அவர் இன்று! என இழுத்தாற்போல் கேட்டால் நான் பதில் எதுங் கூறும் நிலையிலில்லை. பிர்லா மந்திர் இந்நாட்டிலுள்ள அத்தனை பெரிய கோயில்களையும் மாதிரியாகக் கொண்டு கோடிக்கணக்கான ரூபாயைக் கொட்டி எழுப்பப்பட்டது. இதற்குமேல் இதில் செலவு செய்ய நாம் தயாராயில்லை. நன்று.

மறுநாளிலிருந்து...

...ணித் திட்டமிட்டோம். ...க்ரா-நங்கல் சென்று ...நேரம் ஒதுக்கியாய்

...வது உலகப்போரிலே, ...ந்த ஜெர்மனி இரண் ...தால் அவைகளின் ...சி நிலையங்கள். அடுத்த ...யோடு அழிந்துபட்ட முன்னேற்றத்தை

தக்கதாக அவர்களுக்கில்லையே! காந்தியார் உண்மையிலே உளம் நொந்துதான் இவ்விடத்தை உறைவிடமாகக் கொண்டு உழைக்கமுன் வந்திருக்கிருர். இருந்தும் ஏனே வார்தா எள்ளளவும் முன்னேறியிருப்பதாக எனக்குப் படவில்லை. அவ்வளவிற்கு மோசமாக உள்ளது நிலை. வண்டியும் புறப்பட்டது. உணவு வண்டியில் வேலையை முடித்துக்கொண்டு இறங்கினேம்.

...தலை. அங்கு... நிலைமையை விளக்கினுர். நான் ஆங்கிலத்தில் கேட்டதால் சென்னைவாசி என்று புரிந்து, இந்தியில் பேசட்டும் என்றே கேளாக் காதினராக அஞ்சலக வேலையாள் இருப்பதாக எடுத்துரைத்தார். எனக்கோ ஒரே ஆத்திரம். இந்த அளவில் அருகிலிருந்தவர் "அரைகுறை யானுலும் பரவாயில்லை, இந்தி மொழி கேளுங்கள் கிடைக்கும்"

...மாக எல்லாப் புகைவண்டி நிலையங்களும் ஏற்கனவேயே இருக்கின்றதற்கு மறுபுறத்தில் புதிதாகப் பெரும் அளவில் நீளமாகவே நிலையங்கள் ஏற்படுத்தப்படுகின்றன. கனடாவிலிருந்து வந்திருக்கும் 'எஞ்ஜின்'கள் அதிகச் சக்திபெற்று பெரும் அளவு வண்டிகளை இழுக்கின்ற காரணத்தால் "பிளாட்பாரங்களும்" நிலையங்களும் நீளு...

செல்ல எ... இடையே திரும்பவும் விட்டது.

இரண்டா... படுநாசமடை... டாக்கப்பட்ட... இரண்டு கா... படி அடி... போலந்தின்...

...கள்! வடநாட்டில் பத்து நாட்...

உ. பில்லப்பன்

...ந்து இடித்துக்காட்டும் ...நிலையம், அழிந்துபட ...பழிவாங்கும் நோக் ...ம் அளவு விஞ்ஞானப் ...றைகளில் வெற்றி பெற் ...அமெரிக்க நாட்டுப் ...ட்சி இடம், விஞ்ஞானி ...லத்தைப் பிளாஸ்டிக் ...ன்ருலும் கண்ணடித் ...லேயே பெரிதும் வாழ ...தை எடுத்துக் கூறு ...ர்ச்சிபெற்ற பெல்ஜியம், ...வேகியா 'ஏழை என்றும் ...ன்றும் எவருமில்லை ...உலகுக்குரைத்து நேசக் ...ரஷியா, அதன் வழி ...வற்றிகண்ட புசிய சீனு, ...ஏறத்தாழ நாடுகள் ...லையங்களைத் திறந்திருந்...

...யிராகும் நிலக்கடலையை ..., குறிப்பாக இங்கிலாந்து ...டால் விலையிறங்கும். ...ப் பெரிதும் வாங்குகிருர் ...க்கும்புரியாத புதிராகவே ... ஆனுல், ஆங்கில நாட்டு ...கள் இதைக்குழம்பாக்கிச் ...யன மாறுதல்களுக்குப் ...லிருந்து நாறெடுக்கிருர் ...த் துணியாக நெய்தால் ...த் துணியைக் காட்டிலும் ...ாகப் பல மடங்கு பலம்

—11-ம் பக்கம்—

அதுதான் நாகபுரி. நாகபுரி என்றவுடனேயே நமக்கெல்லாம் காங்கிரசுக் கட்சி கொண்டுவந்த மொழி வழி மாநில அமைப்புத் தீர்மானம், அங்கு நடைபெற்ற தொழிற் சங்க மாநாடுகள் இன்ன பிறவுமே நினைவிற்கு வருகின்றன. ஆகவே நாகபுரி ஒரு சொர்ணபுரியாயிருக்கும் என நம்ப இடமிருக்கிறது. அந்தோ! பரிதாபம். எங்கெங்கினும் ஏழைகள் மோழையாக மட்டுமல்ல, பாழான நிலையிலேயே இருந்துவருவர் போலும். வெளிநாட்டிலிருந்து வருவோர் இந்தியாவின் முன்னேற்றத்தின் உண்மை நிலையைக் காண இருப்புப் பாதையின் இருமருங்கிலும் இருக்கும் இன்னலுற்ரேரின் இடத்தைப் பார்த்த அளவிலேயே புரிந்துகொள்வார்கள். மண்குடிசைகள், வீட்டைச் சுற்றிலும் மாடும், ஆடும். அதன் விளைவான அசுத்தமான சூழ்நிலை. அடடே வண்டி புறப்பட்டுவிட்டது.

மறுநாள் காலை 4-30 மணிக்கு ஆக்ரா வந்திறங்கினேம். 7 மணிக்கு ஊருக்குள் சென்றேம். பின்னர் கடிதம் எழுதவேண்டியிருந்ததால் அஞ்சலகம் சென்று கூடு, அஞ்சலட்டை முதலியன கேட்டேன். அவ்வளவுதான், அங்கிருந்தவர் முறைத்துப் பார்த்தாரே தவிர பதிலில்லை. கவனிக்கவில்லை எனக் கருதி மீண்டும் கேட்டேன். இப்

என்ருர். ஆத்திரங்கொண்டவனுகச் சற்றுக் கடுமையாகவே கேட்டேன். அவர்களுக்குள் ஏதோ பேசிக்கொண்டு பின் எனக்குத் தேவையானவற்றைக் கொடுத்தார்கள். அந்த அளவு மொழிப்பற்று தேவைதான். ஆனுல், அதே ஒன்று வெறியாகும் போதுதான் நிலைமை வேருகிறது. என்ன செய்வது! செத்த வடமொழியில் செழுந்தமிழ் பிறந்ததெனச் செப்பிடுவோர் நாட்டினன் அல்லவா நான்?

தாஜ்மகால் கண்டேன். அடுத்து ஆக்ரா கோட்டைக்கும் சென்றேம். அதைப் பார்த்த அளவிலேயே தஞ்சைப் பெரிய கோயில், கங்கை கொண்ட சோழபுரத்துப் பழமான கோயில் முதலானவைகளே நினைவுத்திரையில் வந்தன. கோட்டை கொத்தளங்கள் இடக்கட்டும் வழிபாடு இடமாகவும் உடன் வருமானம் அளிப்பதாகவு மட்டுமல்லால், கலையிலும் எடுத்துக்காட்டாக இருக்கும் இவைகளைக் கூடவா அரசினர் பாதுகாத்துப் பார்வையாளருக்குக் காட்டக்கூடாது? அது வடக்கே. இது தெற்கே. திருமலைநாயக்கர் மகாலுடன் ஒப்பிடும் திறன்கூட இல்லை ஆக்ராக் கோட்டைக்கு. ஆனுல், ஒரேயடியாகப் போற்றிப் புகழப்படுகிறது.

மறுநாள் காலை டில்லி வந்

கின்றன. மேலும் புதுப்புதுப் பெருங் கால்வாய்கள் மதுரா மாவட்டம் முழுமையும் காணக் கிடக்கின்றன. இவையத்தனையும் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ்தான்.

ஆச்சு, டில்லி வந்தாகிவிட்டது. குளிர் சற்றுக் கடுமையாகவே இருந்தது. விடிந்தது. குளித்துச் சாப்பிட்டுப் பின் முதல் வேலையாக ராஜ்கட்டம் சென்றேம். ராஜகட்டம் செல்லுமுன்பே காந்தியாரின் கல்லறை பேசுவது, மன்னிக்கவும், கேள்வி கேட்டுவிட்டுப் பதிலுக்குக் காத்திராமலேயே அழுவது கண்டேன். கண்ணீர் மல்கிற்று. உடன் இருந்த தோழர் சொன்னுர் இது தான் வருமான வரி அலுவலகக் கட்டிடம் என்று. ஓங்கி வளர்ந்து ஒய்யாரமாகக் காட்சிதரும் கட்டிடந்தான். அங்கே தென்னுட்டின் ஈனக்குரல் கேட்டது. அதில் ஆச்சரியம் ஒன்றுமில்லையல்லவா. இக்கட்டிடத்தை ஓரளவிற்கேனும் எடுத்துக்காட்டாகக் கூறவேண்டுமானுல் சென்னைப் பல்கலைக் கழகத் தேர்வு மண்டபத்தை எடுத்து கொள்ளலாம்.

வண்டிக்காரன் ஏதோ சொல்லக் கீழே இறங்கினேம். முன்னிருப்பது தான் அண்ணல் காந்தியாரின் உடல் புதைக்கப்பட்ட அந்த ராஜ்காட். இப்போது புரிந்தது. ஏன்

எடுத்துரை... அந்நாட்டு... விட்டாலும் ...குடன் பெரு... போர் முறை... றிருக்கும் ...பொருட் கா... கள் இக்கா... காலம் எ... தொழிலா... லாம் என்... மளவு தே... செக்கோஸ்... அடிமையெ... இங்கு' என... கரம்நீட்டும் ...சென்று செ... இப்படியாக... தங்கள் நி... தனர்.

இந்த ப... வெளியார்... வாங்காவி... ஏன் இதை... கள்? யாரு... இருந்தது. அறிவாளி... சில பலரச... பின் அதி... கள். இவை... சாதாரண... மெல்லிய...

எண்ணம்

மலர் 2 | 28-2-56 | இதழ் 37

இன்னுமா ஊமை வேடம்?

அங்கு, இங்கு எனுதபடி, ஒரு காலத்தில் எங்கும் புகழ் பெற்றிருந்த தமிழினத்தார் இன்று விரட்டப்படும் இனம் என்ற புதியபட்டத்தைப் பெறக்கூடிய தாழ் நிலைக்கு இழுத்து வரப்பட்டிருக்கிறார்கள். பொன்னேட்டின் புகழ் முத்துக்களென ஒளிவிட்டுக் கொண்டிருந்த தமிழர்களின் வீரமும் விவேகமும் அந்நியர்களால் அரித்துத் தின்னப்பட்டுவிட்டன. வாழ்வை வளப்படுத்த பிற பகுதிகளில் குடியேறிய தமிழர்களில் இன்று யாரும் இன்புற்றிருப்பதாகத் தெரியவில்லை அந்தமான் தீவிலும் அலைகடல் தாண்டிய தென்னுப்பிரிக்காவிலும் தமிழர்களுக்குத் தொல்லைகளே தினசரிச் சம்பாத்தியமாகிவிட்டன. துணை நிற்க ஆள் இல்லை-தட்டிக் கொடுக்க நாதி கிடையாது அங்கெல்லாம்!

இலங்கை—கண்படு தூரத்தில் இருக்கும் சின்னஞ் சிறு நிலப்பரப்பு! பொலிவிழந்து கிடந்த அந்த மண்ணை எழில் மாளிகையாக்கினுர்கள் தமிழர்கள். "எங்கள் நாடு இலங்கை-எம் பாட்டன் இராவணன்—அவன் கட்டிக்காத்த மண்டலம்" என்று பெருமையோடு தலை நிமிர்த்தி வாழ்ந்து கொண்டு வந்தார்கள் 'இந்த வாழ்வு அன்ளுெரு நாள்' என்று எண்ணி ஏங்க வேண்டிய நிலைக்கு இன்றைய இலங்கைத் தமிழர்கள் அடித்தளத்திற்குப் போய்விட்டார்கள் இலங்கையில் சிங்களமும் தமிழும் சமத்துவமான இரு ஆட்சி மொழிகளாக இயங்கி வந்திருக்கின்றன. இந்த நிலையைக் கவிழ்த்துவிட இலங்கை சர்க்கார் முடிவெடுத்துவிட்டது இலங்கைத் தீவு முழுதும் சிங்களமே தனி ஆட்சி மொழியாக இருக்க வேண்டுமென. சென்ற கிழமை நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் எட்டாவது மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது இந்தத் தீர்மானம் இலங்கைத் தமிழர்களை மட்டுமல்லாமல், ஏற்கனவே புண்பட்டுக் கிடக்கும் தாய்த் தமிழகத்தினரையும் வேதனைக்குள்ளாக்கி யிருக்கிறது. கடந்த சில நாட்களாக, முறைகேடான செய்கைகளில் இறங்குவதையே குணமாகக் கொண்டிருக்கும் இலங்கை அரசு, அங்குள்ள தமிழர்களின் இதயத்தையே குத்திக் காட்டும் விவேகமற்ற செயலில் ஈடுபட்டிருப்பது வருந்தத்தக்க செயலாகும். ஆளும் கட்சியினர் தமிழின் செல்வாக்கை அழித்திடத் துணிந்தமைக்கு எந்த விதக் காரணமும் சொல்லவில்லை சிங்கள வெறி இட்டுச் சென்ற இடுக்கண் நிறைந்த பாதையை அவர்கள் பின்பற்றியிருக்கிறார்கள் உண்மையிலேயே இலங்கை அரசினர் மாநாட்டின் தீர்மானம் சிங்கள வெறியின் விளைவுதான் என்றால் அந்த மொழியினருக்கு நன்றி கொல்லும் இழிபண்பு உண்டோ என்றுகூட எண்ணிடத் துணிகிறது நம் நெஞ்சு கல்லும் முள்ளும் நிறைந்த. காட்டுப் பகுதிகளைக் காசு விளையும் செல்வப் புதையலாக்கிய செந்தமிழ்ப் பரம்பரையினரைத் துரத்தியடிக்க நினைத்திடும் மொழியினரை நாம் எந்த வரிசையில் சேர்க்க முடியும்?

அனைத்துலக அரசியல் நிகழ்ச்சிகளில் அங்கமேற்கத் துடி துடித்து நிற்கும் இலங்கை, தமிழர்களுக்கு இவ்வளவு பெரிய துரோகத்தைப் புரியத் துணிந்திடும் அளவுக்கு இதயத்தையும் மனச் சான்றையும் ஒதுக்கி வைத்திருப்பது கூடாதது மட்டுமல்ல அநீதியானதும்கூட. "சிங்களத் தீவில் குடியேறி இருப்பது தமிழர்களல்லாது வேறு மொழியினராக இருந்தால் நாங்கள் ஒற்றுமையாக வாழ்வோம்" என்ற எண்ணம் சிங்களவர் மத்தியில் வேரூன்றி யிருப்பதாகச் சொல்லப்படுகிறது. தமிழ் மக்களின் பால் சிங்களவர் கொண்டிருக்கும் கசப்புக்கு இது ஒரு சான்றாகும். திறமைக் குறைவானவர்களும், உழைக்கும் சக்தியற்றவர்களும் தமிழர்பால் சீறுவது இயற்கைதான். வாழ்வின் சுவையினை வியர்வைத் தடாகத்திலே கண்டு மகிழும் இனத்தாரை, இடையிலே கிடக்கும் தண்ணீரைக் காண்பித்து ஓட்டிவிடுவது இன்றைய சிங்களவரின் தலையாய இலட்சியம் என்று எண்ணி மகிழ்கிறார்கள். கூடாது, முடியாது என்று வாதிட நமக்கு வக்கீலாக அமைந்திருக்கும் டில்லி சர்க்காரர் நாக்கு இல்லாததாகவும், நரம்பிலே முறுக்கில்லாததாகவும் இருப்பது சிங்களத்தாருக்கு இரட்டை மகிழ்ச்சியைத் தருவதாக இருக்கிறது. ஆயிரக்கணக்கான மைல்களுக்கப்பால் நடைபெறும் சாதாரண நிகழ்ச்சிகளுக்கெல்லாம் தனது அருமை நண்பர் கிருஷ்ண மேனனை அனுப்பி, பேரும் புகழும் எய்த விரும்பும் பண்டித நேரு, தமிழ் மக்களுக்காக உருப்படியான ஒரு நல்ல காரியத்தைச் செய்ய முன்வருவதில்லை. அவர் குணம்—அவர் பண்பு — அவருக்குக் கிடைக்கும் மற்றவர்களின் போதனை அப்படி! வரிப் பணத்தைக் கொண்டு தூதுவர் என்ற பட்டத்தின் பேரால் இலங்கையிலே விரிந்த வாழ்வு நடத்துகிறவராவது தமிழர் பால் அக்கறை கொண்டிருக்கிறாரா என்றால் அதுவும் கிடையாது, சென்னை சர்க்காரும், அவர்களுக்கு முதலாளி ஸ்தானத்திலிருக்கும் டில்லி சர்க்காரும் இலங்கை வாழ் தமிழர் குறித்தும், தமிழ் மொழி குறித்தும் மிகுந்த கவனம் எடுத்துக் கொள்ள வேண்டும். அதற்கு முதற்படியாக தமிழின் பால் அக்கறை கொண்ட-தமிழ்க் கலாச்சாரம், பண்பு இவைகளின் பால் நம்பிக்கை கொண்ட தமிழரையே இலங்கையில் தூதுவராக நியமிக்க வேண்டும். செய்வார்களா? காமராசரின் ஊமை வேடம் எத்தனை நாளைக்கு அவரைக் காப்பாற்றும்?

பிப்ரவரி 20 - சென்னையில். சில காட்சிகள்!

★ இவர்களிடம் மதிப்பிழந்தார் காமராசர். பிப்ரவரி 20-ல் திருவல்லிக்கேணிக் கடற்கரையிலே கூடிய 'சென்னை.'



★ தலைநகர்ச் சேனையின் முன்வரிசையில், கூட்டணித் தலைவர் பி. டி ராசன் அவர்கள்

★ கூட்டணியில் அங்கம் வகித்த தலைவர்களான இரா. நெடுஞ்செழியன், ம. பொ. சி., சின்ன அண்ணுமலை, என். வி. நடராசன், கே. விநாயகம், ஜி. உமாபதி, கா. மு. ஷெரீப், சின்னதுரை ஆகியோர்.

—போட்டோ : தென்றல்-திரை சாமுவேல்

மாதவி

ஈரோட்டான்

மாதவியா? அவள் கோவலனைக் கெடுத்தவள். கற்பரசி கண்ணகியின் வாழ்வைக் கருக்கியவள்-என்றுதான் தமிழ் மாந்தர் அறிவர். அது போய்க் கூற்று என வாதிக்கிறார் பேராசிரியர் "ஈரோட்டான்". தக்க ஆதாரங்களுடன் தன் கருத்தை இங்கே நிலை நாட்டுகிறார். கோவலன் கண்ணகியை விட்டுப் பிரிந்ததற்குக் காரணம் கூறி, மாதவி அறிந்திருந்தவாழ்க்கைக் கலையையும் விளக்கியுள்ளார் இந்த ஆராய்ச்சிக் கட்டுரையின் மூலம். (ஆ-ர்,)

நளினமிக்க ஒரு நங்கை இந் நானிலத்தில் நடனக்கலையின் உருவமெனத் தோன்றினாள். மயிலன்ன ஆடற்கலையும், குயிலன்ன பாடற் கலையும் வாய்க்கப் பெற்ற அவள் மங்கையர் குல திலகமாய், மாண்புறு அழகியாய் விளக்கமுற்றாள். அவளால் கலைகள் யாவும் சிறப்புற்றன. பாராளும் மன்னன் முதல் பாமர மக்கள் வரை அவளின் ஆடலைக் கண்டு ஆனந்திக்காதவரில்லை. அழகைக் கண்டு அதிசயிக்காதவரில்லை. கண்டார் களிக்க, கேட்டார் மகிழ, கார் மேகமிடை மின்னலாய் அவள் அரங்கெல்லாம் தோன்றி ஆடலானாள். புகாரிலே அப்பூங் கொடியாளைப் புகழாதவரில்லை. புவியார் போற்றும் அத்தகைய பெருமைக்குரிய பெண்ணழகி தான் யாரோ? அவள்தான் மாதவியென்னும் மலர்க்கொடியாள். கற்புக்கனியாய், கலையின் சிகரமாய், அன்பின் ஆழியாய், எழிலின் இருப்பிடமாய், விளக்க முற்றாள். உற்ற காதலனுக்காக, பெற்ற மகளுக்காகத் தன் உயரிய வாழ்வையே உதறித் தள்ளி விட்ட உத்தமி அவள். சிலம்பென்னும் பொன்னரிமாலை மாதவியென்னும் மாணிக்கத்தால் சிறப்புறுகின்றது.

மாதவி பிறந்ததோ கணிகையர் குலத்தில். ஆனால் வாழ்ந்ததோ கற்பு வாழ்வில். குப்பையிலும் மாணிக்கம், சேற்றிலும் செந்தாமரை என்பது போல பரத்தையர் குலத்திலும் ஒரு பதிவிரதையாக மாதவி வாழ்ந்தாள். அவளது கற்பிலோ களங்கமில்லை; கலையிலோ குறைவில்லை; காதலிலோ மாற்றமில்லை; எல்லாம் நிறைவுற்ற எழிலோவியமாய் மாதவி தோற்றமளித்தாள்.

கரிகாற் பெருவளத்தான் அரண்மனை அரங்கிலே மாதவி தன் துடியிடையசைத்துக் கொடியென ஆடக் கண்டான் கோவலன். அவளது அழகிலும், கலையிலும் தன் அறிவையும் கருத்தையும் அடகு வைத்தான். மாதவியைக் கண்டான்; தன் தனைவியை மறந்தான். மணந்த கண்ணகி மறதிக்காளானாள். மாற்றாள் மாதவி மகிழ்விற்கேதுவானாள். இன்ப மாதவியைத் தன் இதயச் சிறையில் வைத்தவனும் அவளை அடைய ஏற்ற சமயத்தை எதிர்நோக்கியிருந்தான் கோவலன். மாதவியின் ஆடலை மெச்சி மன்னன் கரிகாலன் அளித்த மணிமாலையினைச் சித்ராபதி, நம்பியர் திரியும் நகரவீதியிலே விலை கூறிக் கொண்டிருக்கக் கண்டான் கோவலன். மாலைக்கேற்ற பொன்னினைத் தருவோர் மாதவிக்குரிய மணவாளனுவான் என்றவள் கூறக் கேட்டதும், மாலைக்குரிய பொன்னைக் கொடுத்துக் கண்ணினும் மேலாம் மாதவியை அடைந்தான் கோவலன். அரண்மனை ஏகிய அன்புக் கணவர் மீள்வார் மீள்வாரென அவன் வரும் வழிமேல் விழிவைத்துக் காத்திருந்தாள் கண்ணகி. சென்றவன் திரும்பவில்லை. இரவு நாழிகை எட்டாயிற்று, பத்தாயிற்று, பன்னிரண்டிற்கும் மேலாயிற்று. கண்ணீரும் கம்பலையுமாய் கண்ணகி ஏக்கமுடன் அவ்விரவைத் தனித்திருந்து கழிக்க, பன்னீரும், பழரசமும், பஞ்சணையுமாய் கோவலனும் மாதவியும் அவ்விரவைக் கூடிக் கழித்தனர். இன்ப ஒளி வீசிய கண்ணகியின் வாழ்வில் துன்ப இருள் சூழ்ந்தது. காதலுக்கு அர்ப்பணிக்க வேண்டிய தன் இன்பவாழ்வைக் கண்ணகி காலத்திற்கு அர்ப்பணித்தாள். இன்று சென்றவர் என்றோ ஒரு நாள் திரும்புவார் என்ற நம்பிக்கையோடு பொறுமையின் பொக்கிஷமாய் கண்ணகி வாழ்ந்து வந்தாள். வளமான கண்ணகியின் இல்லறவாழ்வுப் பாதையில் மாதவி ஓர் முட்புதராக அமையவில்லை. கண்ணகி வாழ்வின் வரட்சிக்குக் கோவலன் தான் காரணமேயன்றி மாதவியல்ல என்பதை நாம் அறிய வேண்டும். இணைந்த கோவலனும் மாதவியும் எட்டாண்டுகள் இன்பம் கண்டனர். இன்ப மணிமேகலையை ஈன்றெடுத்தனர்.

கவிஞர் மாதவியைப்பற்றிப் பேசுகின்ற இடங்களிலெல்லாம் மிக உயர்ந்த கதாநாயகியாகவே எடுத்துக் காட்டுகின்றார். கவிக் கூற்றாக எந்தெந்த இடங்களில் மாதவி பேசப்படுகின்றாளோ அந்தந்த இடங்களில் அவளோர் குணக்குன்றாகத் திகழுமாறு அடிகளார் அவளை ஆக்கியுள்ளார். நடுநிலைமையற்ற கம்பன் போன்ற இடைக்காலக் கவிஞர்களால் மாதவி பேசப்படுவாளேயானால் தாசி, வேசி, பரத்தை, விலைமகள் போன்ற வசைகளுக்கு ஆளாகியிருப்பாள். ஆனால் செம்மை சான்ற இளங்கோ கைப்பட்ட மாதவியோ மாற்றுக் குன்றாப் பசும் பொன்னாக நமக்குத் தோற்றமளிக்கின்றாள். மாதவி வாசகர்களுக்கு அறிமுகம் செய்து வைக்கப்படும் முறையே ஒரு தனிச் சிறப்புடையதாய் இருக்கின்றது.

மனையறம் படுத்த காதையின் இறுதியில் "இவ்வாறு சில ஆண்டுகள் கழிந்தன" என்ற தொடரால் அக்காதையை முடிக்கின்றார் இளங்கோ. ஒரே தன்மையில் வந்து கொண்டிருந்த கதைப்போக்கை வேறோர் தன்மைக்கு மாற்ற விரும்புகின்றார் கவிஞர் இத்தொடரின் மூலம். சிறுர்களுக்குக் கதை சொல்லி வரும் பெரியவர் இடையிலே கதையை நிறுத்தி "இவ்வாறு கொஞ்ச நாள் போச்சு" என்றதும் சிறுவர்கள் பெரியவரிடம் 'அப்புறம் என்ன தாத்தா ஆச்சு' என்று ஆவலோடு கேட்பதைப் போல, கண்ணகி கோவலன் திருமணத்தைப் பற்றியும், அதனுல் அவர்கள் கண்ட இன்பத்தைப்பற்றியும் கூறிவந்த ஆசிரியர் அதை அதோடு நிறுத்திக் கொண்டு கதையின் இனி வரும் நிகழ்ச்சிக்காக வாசகர்கள் ஆவலுடன் எதிர்நோக்கியிருத்தல் வேண்டும் என்பதற்காக 'இவ்வாறு ஆண்டுகள் சில கழிந்தன' என்ற இத்தொடரினை மனையறம் படுத்த காதையின் இறுதியிலே கூறியிருக்கின்றார் போலும்! இதையடுத்து வரும் நிகழ்ச்சியே மாதவியைப் பற்றியதாம். இவ்வாறு சிலம்பில் மாதவி தனிச் சிறப்புடன் இடம்பெறுகின்றாள். 'மாதவியை எவ்விடத்தும் சிறப்பித்துப் பேசுகின்ற இளங்கோ யாது காரணம் பற்றிப் பதிகத்திலே அவளைக் கணிகையெனக் கூறவேண்டும்?' என்று சிலர் வினவலாம். பதிகக் கருத்துக்களை ஆழ்ந்து நோக்குவார்க்கு இவ்வினா தவறுடைத்தென்பது தெரியவரும்.

சிலப்பதிகாரப் பதிகம் இளங்கோவால் செய்யப்பட்டதன்று என்பதை வாசகர்கள் முதலில் தெரியவேண்டும். (இதைவிளக்கி யெழுதின் அதுவோர் தனிக் கட்டுரையாகப் பெருகுமாதலால் பதிகத்தைப் பற்றிய இச்செய்தியைத் தனியாக ஓர் கட்டுரையாகப் பின்னர் எழுதுவோம்) சிலம்பிலே மாதவியைப்பற்றி இளங்கோ வடிகள் பேசும் இடங்களிலெல்லாம் "தாதவிழ் புரிகுழல் மாதவி" யென்றும் "மாமலர் நெடுங்கண் மாதவி" யென்றும் சிறப்பித்துப் பேசும் போது பதிகத்தில் மட்டும் கணிகையென்று இழிவாகக் கூற மனம் ஒப்புவாரா? இத்தகைய இழிசெயலை இமயமன்ன மனவுயர்ச்சி பெற்ற இளங்கோ செய்ய முற்படுவாரோ? இளங்கோ வல்லாது பிறரொருவரால் பதிகம் செய்யப்பட்ட காரணத்தால் அதில் மாதவியைக் கணிகையென்று இழித்துப் பேசப்பட்ட குற்றத்திற்கு இளங்கோ இலக்காவாரல்லர் என்பது தெளிவாம்.

தாமரை மலரும்போது அல்லி குவியத்தானே செய்யும். மாதவி மகிழும்போது கண்ணகி துன்புற்றாள். துள்ளும் இளமைக்கால இன்பவுணர்ச்சிகளை அடக்கொண்டு அல்லும் பகலும் அல்லலுற்றாள். மாதவியைப் போல கண்ணகியும் இளம்பருவத்தாள் தானே! மருந்தற்ற காமநோய்க் கொடுமையால் கண்ணகி வாடும் போதெல்லாம் மாதவியைப்பற்றியும், கோவலனைப்பற்றியும் சிறிதேனும் எண்ணிப் பாராமலா இருப்பாள்? அற்பக் காம வுணர்ச்சியை அடக்கமுடியாது அதற்கு அடிமையானாள் கண்ணகியென்றால், அது அவள் கற்புத்தன்மைக்கு இழுக்கென்று எண்ணிய அடிகளார், அவளது உளவேதனையை வெளிக் காட்டாது மறைத்து விட்டார். மானிடக் கண்ணகியைத் தெய்விகக் கண்ணகியாக்க விரும்புகின்ற அடிகளார் இத்தகைய சிறு பிழைகள் கண்ணகிபால் இருப்பதாகக் காட்ட விரும்புவரோ? கண்ணகியின் துன்ப நிலையினையும், மாதவியின் இன்பநிலையினையும் அந்தி மாலை சிறப்புசெய் காதையில் அடிகளார் விளக்கமாகக் கூறிச் செல்கின்றார். கல்வியிலும், கலையிலும் வல்லவனுயிருந்த கோவலன் உள்ளத்தால் எளிமையுற்றிருக்கும் தன்மையை மாதவி எவ்வளவு விரைவாகப் புரிந்து கொண்டாள் என்பதை அடிகளார் கூறிச்செல்லும் வகை சிறப்புடைத்து. அற்ப உடல் இன்பத்திற்காக அன்பு மனைவியைப் பிரிந்து அயலாள் பின் சென்ற கோவலன் மன்னிக்க முடியாத குற்றவாளியல்லவா? தோன்றி மறையும் சிற்றின்பத்தைப் பெரிதென மதிக்கும் பேதை மக்களைப்போல் அல்லாது அடக்கொணுக் காமத்தை அடக்கி அசையா அமைதியுடன் வாழ்ந்த கண்ணகி, பின்னர் உலகோர் ஏத்தும் தெய்வச் சிறப்பைப் பெற்றாள் என்றால், அதிலொன்றும் வியப்பில்லையே! சலனவுள்ளம் படைத்த கோவலன் சாட்டையால் சுற்றிவிடப்பட்ட பம்பரம்போல் மாதவியால் ஆட்டிப் படைக்கப்பட்டான். இளமைத் துடிப்பால் தூண்டிவிடப்பட்ட கோவலன் மாதவியால் அளவற்ற உடலின்பம் காண்பதில் திளைத்திருந்தான்.

— 9-ம் பக்கம் —

பிப். 20-காரைக்குடி வேலை நிறுத்தம்!



20-ந் தேதி சந்தை உண்டு என்று காங்கிரஸ்காரர்கள் போர்டு எழுதித் தொங்கவிட்டார்கள்.........

......அன்று சந்தை இருந்த கோலமோ......படத்தைப் பாருங்கள்.



கெம்பு ஸ்டுடியோ மாடியிலிருந்து பார்க்கும்போது பரபரப்பான கல்லுக்கட்டி இப்படிப் பரிதாபமாகக் காட்சி யளித்தது



சேட்டுகடை திறந்துகிடந்தது. மூடவைத்தனர் பொதுமக்கள்.

காங்கிரஸ்காரர்களின் பெருங்கடைகளும் முழுக்க மூடியிருந்தன.



நகரசபைத் தலைவர் கடை திறந்திருந்தது. எம். எல். ஏயும் கூட இருந்தார்! (பத்திரிகை படிப்பவர்). கூட்டணித் தோழர்களுடன் கண்ணதாசன் மறியல். கடைக்கு யாரும் வரவில்லை!!

போட்டோக்கள்: கெம்பு ஸ்டுடியோ, காரைக்குடி.

பத்து நாட்களில் 2100 மைல்கள்!

பிப்ரவரி 12-ந் தேதி ஞாயிறன்று மாலை 4 மணிக்குச் சென்னையிலிருந்து பொதுச்செயலாளர் நெடுஞ்செழியன், துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன், கண்ணதாசன் மூவரும் புறப்பட்டுக் காஞ்சிபுரம் சென்றார்கள். மாலை 6-30 மணிக்கு காஞ்சீபுரம் பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு, பிறகு அங்கிருந்து புறப்பட்டு இரவு பதினொரு மணிக்குச் செங்கற்பட்டு சென்று மதுராந்தகம் வழியாகத் திண்டிவனம் போய் அங்கு பிரயாணிகள் விடுதியில் தங்கி பதின்மூன்றும் தேதி காலை புறப்பட்டு, விழுப்புரம், புதுச்சேரி, கடலூர், சேத்தியாத்தோப்பு, அணைக்கரை, மாயவரம், குடந்தை, தஞ்சாவூர், திருச்சி சென்று திருச்சியில் தங்கினார்கள். அன்றிரவே திருச்சியிலிருந்து கண்ணதாசன் புறப்பட்டுக் காரைக்குடி சென்றார். மறுநாள் காலை, பொதுச்செயலாளரும், துணைப் பொதுச் செயலாளரும் திருச்சியிலிருந்து புறப்பட்டு மணப்பாறை, திண்டுக்கல், மதுரை, திருமங்கலம், விருதுநகர், சாத்தூர், கோயில்பட்டி, எட்டையாபுரம், தூத்துக்குடி, நெல்லை ஆகிய ஊர்களுக்குச் சென்று, அன்றிரவு நெல்லையில் தங்கினார்கள். மறுநாள் (பிப். 15) அங்கிருந்து சேரன் மாதேவி, அம்பாசமுத்திரம், விக்ரமசிங்கபுரம், தென்காசி, கடையநல்லூர், சங்கரன்கோயில், ராசபாளையம், திருவில்லிபுத்தூர், உசிலம்பட்டி, வத்தலக்குண்டு, ஒட்டன்சத்திரம், பழனி போய், அன்றிரவு உடுமலையில் தங்கினார்கள். பிப்ரவரி 16-ந் தேதி வியாழன் காலை அங்கிருந்து புறப்பட்டு, பொள்ளாச்சி, கோவை, திருப்பூர், ஈரோடு, பவானி, சேலம், தர்மபுரி முதலிய ஊர்களுக்குச் சென்று, அன்றிரவு தர்மபுரியில் தங்கினார்கள்.

பிப்ரவரி 17-ந் தேதி காலை அங்கிருந்து புறப்பட்டு, திருப்பத்தூர், வாணியம்பாடி, ஆம்பூர், குடியேற்றம், வேலூர், ஆற்காடு, ராணிப்பேட்டை, காவேரிப்பாக்கம், ஸ்ரீபெரும்புதூர், பூந்தமல்லி, ஆகிய ஊர்களுக்குப்போய் விட்டு அன்றிரவு எட்டு மணிக்குச் சென்னை வந்து சேர்ந்தார்கள்.

திருச்சியிலிருந்து காரைக்குடி சென்ற கண்ணதாசன், காரைக்குடியில் சர்வகட்சிக் கூட்டணியை, அணித் தலைவர் சி. முரு. நா. நாராயணன் (செட்டியார்) அவர்கள் தலைமையில் கூட்டி பொதுவேலை நிறுத்தம் பற்றிப் பேசினார். அன்று மாலை சுமார் 500 கடைகளுக்குச் சென்று, கூட்டணித் தோழர்களோடு கடையடைக்கக் கோரினார். அன்றிரவே காரைக்குடியிலிருந்து புறப்பட்டுத் திருச்சி வந்து, திருச்சியிலிருந்து வாடகைக் காரில் சேலம் சென்று, பொதுச்செயலாளர் சுற்றுப்பயணத்தில் கலந்துகொண்டார். வடஆர்காடு முழுவதும் சுற்றிவிட்டு பிப்ரவரி 17-ந் தேதி இரவு சென்னை வந்து 18-ந் தேதி காலை தலைமை நிலையத்தில் அறிஞர் அண்ணா அவர்களைச் சந்தித்துப் பேசிவிட்டு, அன்றிரவே காரில் புறப்பட்டு, கீரனூர் சென்று, அங்கிருந்து புதுக்கோட்டை, நமணசமுத்திரம் வழியாக பிப்ரவரி 19-ந் தேதி காலை பத்தரை மணிக்குக் காரைக்குடி சேர்ந்தார். அங்கு கூடிய சர்வகட்சிக் கூட்டணியின் கமிட்டிக் கூட்டத்தில் கலந்துகொண்டு, மாலை பொதுக்கூட்டத்திலும் பேசினார். பிப். 20-ந் தேதி மிகச் சிறப்பான முறையில் காரைக்குடியில் ஹர்த்தால் நடைபெற்றது. காலை எட்டு மணி முதல், பிற்பகல் ஒரு மணிவரை இருநூறு தொண்டர்களோடு நகரைச் சுற்றி அமைதி காத்தார். காரைக்குடி நகரசபைத் தலைவரின் கடை மட்டும் திறந்திருந்தது. எம். எல். ஏ. சொங்கலிங்கம் செட்டியாரும் அங்கு வந்து அமர்ந்திருந்தார். மறியலுக்காக அந்தக் கடைக்குமுன் சிறிதுநேரம் நின்றும், யாரும் சாமான் வாங்க வராத காரணத்தால் பிற்பகல் ஒரு மணிக்கு அங்கிருந்து புறப்பட்டுத் திருப்புத்தூர் சென்று கடையடைப்பைப் பார்வையிட்டு, அங்கிருந்து மேலூர் சென்று, ஊர்வலத்தில் கலந்துகொண்டு, அன்று மாலையே மதுரை சென்று தோழர் முத்துவைச் சந்தித்து ஹர்த்தால் காட்சிகளைப் பார்வையிட்டுப் படம்பிடித்துக்கொண்டு இரவு பதினொரு மணிக்குக் காரைக்குடி திரும்பினர். கெம்பு ஸ்டுடியோ போட்டோ கிராப்பரும், "வாரச் செய்தி" ஆசிரியர் தோழர் சாமி பழனியப்பனும் மேற்கண்ட ஊர்களுக்கெல்லாம் உடன்சென்றார்கள். இருபத்தோராம் தேதி காலை பத்து மணிக்கு அண்ணன் இராம சுப்பையா அவர்களும் பாகனேரி இராம. சுப்பிரமணியனும் உடன்வர திருப்புத்தூர், கண்டவிராயன்பட்டி வழியாக ஆத்திக்காடு தெக்கூர் சென்று புதிய கிளையினைப் பார்வையிட்டுச் செய்யவேண்டிய பணிகள் பற்றிக் கூறிவிட்டு, நெற்குப்பை சென்று, கழகத் தோழர்களைச் சந்தித்துப் பேசி ஒரு விவசாயித் தோழரையும் உடன் அழைத்துக்கொண்டு, வேந்தன்பட்டி சென்று கழகத் தோழர்களைச் சந்தித்து, அங்கிருந்து திருக்களம்பூர் சென்றார். அந்தத் திருக்களம்பூர் கிராமம் முழுவதும் தி. மு. கழகமாயிருப்பதைக் கண்டார். கழகத்தோழர்களோடு சிறிதுநேரம் அளவளாவி விட்டு, மேலைச்சிவபுரி போய் செந்தமிழ்க் கல்லூரி மாணவர்களையும், ஆசிரியர்களையும் சந்தித்துவிட்டு, பொன்னமராவதி சென்று, கைது செய்யப்பட்ட கழகத்தோழர்களைப் பார்த்துவிட்டு திரும்பவும் மேலைச்சிவபுரி வந்தார். அங்கு மாணவர்கள், ஆசிரியர்கள், தனவணிகர்கள் நிறைந்த ஒரு கூட்டத்தில் பேசிவிட்டு, அங்கிருந்து புறப்பட்டு இரவு எழரை மணிக்கு பாகனேரி சென்று திராவிட முன்னேற்றக்கழகப் பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு இரவு பனிரெண்டு மணிக்குக் காரைக்குடி திரும்பினார்.

பிப்ரவரி 22-ந் தேதி காலை பத்து மணிக்குக் காரைக்குடியிலிருந்து புறப்பட்டுத் திருச்சி வந்து தோழர் எம். எஸ். மணியையும் கழகத் தோழர்களையும் சந்தித்துவிட்டு மாலை 4 மணிக்கு அங்கிருந்து புறப்பட்டு இரவு எட்டு மணிக்குச் சென்னை வந்து சேர்ந்தார்.

★ ★ ★

— 10-ம் பக்கத் தொடர்ச்சி —

தலைவர்கள் அந்த நேரத்தில் மேடையிலிருந்து கொண்டே பூரித்தார்கள்.

கடற்கரைக்குச் 'சென்னை' வந்திருந்தது. கூட்டணித் தலைவர் பி. டி. ராசன் அவர்கள், தட்சிணப் பிரதேசத்தைக் கண்டித்தும், தேவிகுளம், பீர்மேட்டைத் தமிழ்நாட்டோடு இணைக்கக் கோரியும், சென்னை ராஜ்யம் என்ற பெயர் தமிழ்நாடு என வழங்கவேண்டும் என்றும் கோரப்பட்டுள்ள தீர்மானத்தை வாசித்தார்கள். ஒருமித்த ஆதரவுடன் தீர்மானங்கள் நிறைவேறின.

கடைசியாக, திராவிடர் தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள், கூடியிருந்த சென்னைக்கு நன்றி தெரிவித்துவிட்டு, அவர்களிடம், 'அமைதியோடு கலைந்துபோகிறோம்' என்ற உறுதிபெற்றார். இருபதாம் நூற்றாண்டின் பெருந்தலைவர்களில் அறிஞர் அண்ணாவும் ஒருவர் என்பதை அவருடைய அன்றைய பேச்சும் செயலும் எடுத்துக்காட்டின.

மேடையிலிருந்தபடியே அண்ணா அவர்கள் 'எழுந்திருங்கள்' என்று அன்புக் கட்டளை இட்டார்கள். உட்கார்ந்திருந்த சென்னை மறுகணம் எழுந்து நின்றது. 'கலைந்துபோங்கள்' என்று மறு உத்தரவு பிறப்பித்தார். இந்த நிகழ்ச்சியைக் காணப் பெறாதவர்களுக்கு விளக்க எண்ணி இன்றுவரை பல உதாரணங்கள் தேடினேன். ஒன்றும் பொருத்தமுடைத்தாகப் படவில்லை. பக்தன் நிலையிலிருந்து எண்ணிப் பார்த்தால் தேவாலயத்தில் குறிப்பிட்ட காலத்திற்கு மௌனக் கட்டளை பிறப்பித்து, காலமுடிவைக் கடிகாரம் தெரிவித்ததும், மண்டியிட்டுக்கிடந்த மக்கள் ஒரே நேரத்தில் எழுந்து கலைந்து போவதுபோல் தோன்றியது.

கடற்கரைச் சென்னை தனித்தனியாகக் கலைந்துபோகும் போது பேச்சற்ற சாவு ஊர்வலமாகவே இருந்தது அப்படி இருக்க வேண்டுமென்றுதான் சர்வகட்சிக் கூட்டணி விரும்பியது.



இது மேலூர் ஊர்வலம். கண்ணதாசனும் கலந்துகொண்டார்.



மதுரை ஊர்வலத்தில். தோழர் முத்துவும் மற்றையவரும்.

வேலங்குடித் திருவிழா

கண்ணதாசன்

டாக்டர், பாலனைத் தனியாக அழைத்து வந்து இன்ன நோய் என்று முழுக்கச் சொல்ல மனம் வராமல் முக்கி முனகித் திக்கித் திணறிச் சாடையாகச் சொல்லி வைத்தார். அவர் சொன்னது இந்திராவுக்குத் தெரியாது. பாலன், டாக்டரை அனுப்பிவிட்டு அசந்துபோன நிலையில் இந்திராவிடம் வந்தான். "என்ன சொன்னார் டாக்டர்?" என்று கேட்டாள் அந்த இள மனதுக்காரி. சொன்னதை அப்படியே சொல்லி விடலாம். ஆனால், சொன்னபிறகு அவள் மனம் என்ன பாடு படும்? பாலனின் இதயத்திலே கருணை இருந்தது; அன்பு இருந்தது; இந்திராவிடத்தில் வலிய அவனே ஏற்படுத்திக்கொண்ட பாசமும் கூடச் சேர்ந்து நின்றது.

"ஒன்றுமில்லை! இது ஒரு வகையான சிரங்காம். நாலு ஊசி போட்டால் தீர்ந்துவிடுமாம்" என்றான் பாலன். தான் சொல்லுகிற ஒரு பொய் பிறரைச் சந்தோஷப்படுத்துகிறது என்றால், அதுமாதிரிப் பொய்களைத் தொடர்ந்து சொல்வது, மகிழ்ச்சி கொள்வது அன்பு இதயங்களின் வழக்கம். பாலன் பொய்யை ஒரு வரியோடு விடத் தயாராயில்லை. மேலும் தொடர்ந்தான்: "நாட்டு மருந்திலேகூட இது தீர்ந்துவிடும். எதற்கும் அல்லோபதி வைத்தியர் வந்தால் நல்லதாயிற்றே என்பதற்காகத் தான் அழைத்தேன்."

இந்திரா மகிழ்ச்சியோடு அவனைப் பார்த்தாள். "சிரங்கு தானே! வேறொன்றுமில்லையே!" என்றாள். பாலன் மேனி மயிர்க்கூச்செறிந்தது. சிரித்துப் பதில் சொல்ல முயன்றான். சிரிப்பா வரும்? இக்கட்டான நேரத்திலும் சிரித்துக் கொண்டே பதில் சொல்ல அவன் என்ன காந்தியா? புத்தனா? அண்ணாத்துரையா? ஆனாலும் பாலன் மிகுந்த கஷ்டப்பட்டுச் சிரிப்பை வரவழைத்துக் கொண்டு, "சேச்சே! வேறொன்றுமில்லை, சிரங்குதான்" என்றான்.

"ஏற்கனவே நான் கறுப்பு. இதிலே சிரங்கு வேறு. என் தோற்றம் உங்கள் பொறுமையைத் தொடர்ந்து சோதிக்கிறது" என்று மெதுவாக இலைமறை காயாகச் சொன்னாள் இந்திரா. பாலனுக்கு அது புரிந்தது. உண்மையிலேயே அது சிரங்குதான் என்றால் உற்சாகமாகக்கூடப் பதில் சொல்லியிருப்பான். அது குஷ்டம்...! பாலனை வேதனையும் அன்பும் மாறி மாறித் தாக்கின.

"சிரங்கு வந்தால் என்ன? அது வரும். போகும்! எல்லோருக்கும் வருவதுதானே!" என்றான் பாலன். ஆம். சிரங்கு வரும், போகும்; குஷ்டம் அப்படி அல்லவே! பாலன் இதைச் சொல்லவில்லை. மனதுக்குப் புதிய சக்தியை வரவழைத்துக் கொண்டு அவள் தலையைக் கோதிக் கொடுத்தான். வலிய ஏற்படுத்திக் கொண்ட அன்பு, அவள் உடம்பைத் தொட இடங் கொடுக்கவில்லை. கலங்கிக் கிடந்த அவன் பார்வை அவளது உதடுகளை வட்டமிட்டது. அந்தக் கொடிய நோயின் பளபளப்பு அங்கே மின்னலிட்டது. பாலன் நடுங்கினான். "எப்படி இவளைத் திருப்தி செய்யப் போகிறோம்?" என்று அவன் மனம் குழம்பிற்று. அந்தக் குழப்பத்தை அறியாத இந்திரா மகிழ்ச்சியோடு அவன் மார்பில் சாய்ந்தாள். அவன் ஒரு முறை செத்துப் பிழைத்

17

தான். "இருங்கள், காபி கொண்டு வருகிறேன்" என்று உள்ளே ஓடினாள் இந்திரா. பாலன் செதுக்காத சிலையாகக் கட்டிலிலேயே உட்கார்ந்திருந்தான். திரும்பிய இந்திரா ஒரு கோப்பைக் காபியை அவன் முன்னால் நீட்டினாள். சாதாரண நேரங்களில் அவள் காபி கொடுக்கும்போது "நீ ஒரு வாய் குடித்துவிட்டுக் கொடு" என்பான். அவளும் அப்படியே கொடுப்பாள். அவனும் வாங்கிக் குடிப்பான். இப்போது அவன் அப்படிச் சொல்லத் தயாராயில்லை. உடனேயே கோப்பையைக் கையில் வாங்கிக் கொண்டான். ஆனால் ஊடலை எதிர்பார்த்த இந்திராவின் முகத்திலே ஏமாற்றம் கொப்பளித்தது. காபியையும் அவன் சுவைத்துக் குடிக்கவில்லை. அருவருப்பு உணர்ச்சியோடு மடமடவென்று குடித்து முடித்தான். இந்திராவுக்கு ஒன்றும் புரியவில்லை. ஒன்றும் பேசாமல் திரும்பி வேறு கட்டிற்குச் சென்றாள். புதிய புடவை எடுத்துக் கட்டிக் கொண்டாள். பௌடர் தடவினாள். வாசனை பூசிக்கொண்டாள. சீவி முடித்துச் சிங்காரமாகத் திரும்பி வந்தாள். அவள் இப்போது அழகாய்த்தானிருந்தாள். அதைக் காணவேண்டிய பாலனின் இதயந்தான் இருள் தோய்ந்து கிடந்தது. "அத்தான்" என்றாள்; அமைதியையே பதிலாகப் பெற்றாள். அருகிலே அமர்ந்தாள்; அவன் அசையாமல் இருந்தான். முகத்தைத் தொட்டாள்; பதுமை போல் திரும்பினான். அவனையே பார்த்தாள். அழுகை வந்துவிட்டது. 'குபுக்'கென்று படுக்கையில் சாய்ந்து குமுறிக் குமுறி அழுதாள். அழுவதற்கும் சிரிப்பதற்கும் நாடி நரம்புகள் சுறுசுறுப்பாக வேலை செய்கின்றன. பாலன் அவளைச் சமாதானப் படுத்தினான். அதில் முழுமை பெற்ற அன்பு இல்லை. கொடிய நோய் என்ற செய்தி தெரிந்த அரை நாளிலேயே அந்த அன்பு பாதி தேய்ந்துவிட்டது. சுய விளம்பரத்தால் கிடைக்கும் புகழ் போலச் சுலபத்திலே இறங்கி விடுகிறது 'வலிந்த அன்பு.' இருதய சுத்தத்திற்காகக் காதலிக்கிறேன் என்று எவன் சொன்னாலும் அது புரட்டு. பத்துசதவீதம் இதயத்துக்காகவும் பாக்கி தொண்ணூறு மேனி அழகுக்காகவும் என்பதுதான் காதல் கணக்கின் பங்கீடு. இந்திரா படித்தவளல்ல. அவளுக்கு இது தெரியாது. அவளாலே அழத்தான் முடிந்தது. இந்தச் சமுதாய அமைப்பிலே பெண்களால் அது ஒன்று மட்டும்தான் செய்ய முடியும். பாலன் அவளைச் சமாதானப் படுத்துகிற பாவனையில் பேசிவிட்டு வெளியேறினான்.

அமைதியற்ற அவன் மனம் அவன் கால்களைக் கடற்கரையை நோக்கித் திருப்பி விட்டது. சென்னையில் இருக்கிறவர்கள் ஏதோ கடற்கரையில் அமைதி காய்த்துத் தொங்குவதாகக் கருதுகிறார்கள். பெரும்பலர் அதைத் தேடியே வருகிறார்கள். சிலர் வம்பளப்பதற்காக வருவதுண்டு. அவர்கள் ரோட்டுக்குப் பக்கத்திலேயே உட்காருவார்கள். பாலன் கடலுக்குப் பக்கத்திலேயே போய் உட்கார்ந்தான்; குமுறிக் குமுறி அலை அடிக்கும் கடல் அவனது தொல்லையை—துயரை மிகைப்படுத்திற்றே ஒழியக் குறைப்பதாயில்லை. செம்படவர்கள் படகுகளிலே வீடு திரும்பிக் கொண்டிருந்தார்கள். கரை

ஆசிரியத் தோழருக்கு..

அன்புள்ள ஐயா,

வணக்கம்.

தாங்கள் கொஞ்சங் கூட இருதயமே இல்லாதவர். உங்களைப் பற்றி எனக்குத் தெரியாது. ஆனால் நீங்கள் எழுதும் 'வேலங்குடித் திருவிழா'வின் சென்ற இதழைப் பார்த்தபோது நீங்கள் எப்படிப்பட்டவர் என்பதைத் தெரிந்து கொண்டேன், இரக்கம் என்ற ஒரு பொருள் இல்லாத அரக்கன் நீங்கள்தான், இந்திராவிற்கு ஏன் குஷ்டம் வரவேண்டும்? அது அந்த பாலனுக்கு வந்து தொலைக்கக் கூடாதா? வனஜாவுக்கு வரக்கூடாதா? எப்படியோ, நல்லபடியாக இந்திரா நோயினின்று விடுபட்டுச் சந்தோஷமாக வாழ வேண்டும், மாற்றுக் குறையாத அந்தத் தங்கம் குஷ்டத்தால் பீடிக்கப்பட்டாள் என்கின்ற வரியே எனக்கு வேதனையாக இருக்கிறது.

மதுரை,
16—2—56.

அன்புள்ள,
எஸ். பத்மாவதி.



யிலே அவர்களின் பெண்டு பிள்ளைகள் அவர்களை எதிர் பார்த்தபடி நின்றுகொண்டிருந்தார்கள். "சின்ன மீனா, பெரிய மீனா?—கணவன் காயப்படாமல் திரும்பினானா?" என அவர்கள் ஆராய்ச்சி நடத்திக் கொண்டிருந்தார்கள். கடற்கரையிலே அவர்களின் காலடிகள் பாலனின் இதயத்திலே துன்பம் நடந்து சென்ற சுவடுகள்போல் தட்டுப்பட்டன. மோதி வந்த அலை அந்த நிலப் பகுதியைப் பளபளப்பாகச் சமப்படுத்திவிட்டுச் சென்றது. அடிச்சுவடுகள் மறைந்தன. பாலனின் இதயத்திலே தோன்றிய வடுக்களை எந்த அலை நிர்த்துவைக்கும்? கற்பனை அவனைக் கடலோடு இழுத்துச் சென்றது. வாழ்வின் முதலைகளைப் பற்றி அக்கறை கொள்ளாமல் ஆணும் பெண்ணும் ஆடித் திரியும் ஆனந்த மேடையாக உலகம் ஏன் இருக்கக் கூடாது? அடிக்கடி சுவடு பதிதலும் அலை மோதுதலும், முதல் மோதல் வேதனையைத் தீர்ப்பதும், மறு மோதல் வேதனையை உண்டாக்குவதும், ஓடிவந்த அலை கிளிஞ்சல்களை விட்டுச் செல்வதுபோல் வந்த தொல்லைகள் அடையாளச் சின்னங்கள் வைத்துவிட்டுப் போவதும்— மனிதனுக்குத்தான் எவ்வளவு தொல்லைகள்! இதற்கிடையில் எத்தனை ஆர்ப்பாட்டங்கள்! வாழ்க்கையை விமர்சித்த தத்துவஞானிகள் இந்த ஆர்ப்பாட்டத்தின் முடிவு பெற்றெடுத்த குழந்தைகள். அந்தக் குழந்தைகளைக் கண்டபிறகும் தொடர்ந்து ஆர்ப்பாட்டம் செய்பவர்கள் பட்டுத் தேறவேண்டியவர்கள்; பக்தவமில்லாதவர்கள்- பாலன் தனக்குச் சம்பந்தமில்லாத இந்தத் தத்துவத்திலும் கொஞ்சநேரம் செலவழித்தான்.

எப்போதும் சாவு வரத்தானே போகிறது என்ற முடிவுக்கு வந்தவன் ஒருபோதும் துன்பப்படுவதில்லை. அந்த முடிவுக்கு வரக்கூடிய பக்குவம் பாலனுக்கு இல்லை. பற்பல நினைவுகளில், அலையிலே நீந்தும் மீன்போல் அவன் எழுந்து எழுந்து அமிழ்ந்து கொண்டிருந்தான். 'களுக்'கென்ற ஒரு சிரிப்பொலி அவன் காதுகளில் மோதியது. திரும்பிப் பார்த்தான். சித்திரப் பாவை போன்ற ஒரு சேயிழையும் அவள் கணவனும் விளையாடிக் கொண்டிருந்தார்கள். கணவன் எழுந்து ஓட முயல்கிறான். மனைவி அவன் கையைப் பற்றிக்கொண்டு ஓடவிடாமல் தடுத்தபடி சிரிக்கிறாள். அதைப் பார்த்த பாலனின் மனம் அந்த இடத்திலே அவனையும் இந்திராவையும் பொருத்திக்கொண்டு நின்றது. பாலன் எழுந்து ஓட முயல்கிறான். இந்திரா கையைப் பிடித்துக் கொள்கிறாள். ஆனால், அவள் சிரிக்கவில்லை. பொங்கிப் பொறுமி அழுகிறாள். "இதுதானா உங்கள் பாசம்? இதற்காகவா இவ்வளவு அன்பு செலுத்தினீர்கள்? வந்தது கொடிய நோய் என்றால் அதற்கு நான் என்ன செய்வேன்? என் கட்டுக்குள் அடங்கக் கூடிய காரியமா? என்னை மீறிய ஒன்று! அதற்காக என்னை விட்டு ஓடுவது நியாயமா?" என்று இந்திரா கதறுகிறாள். பாலனின் கற்பனை வளர்ந்தது. முடிவில் "கண்ணே" என்று கதறிச் சாய வேண்டிய அவனது இதயம் அந்த வரம்பை மீறி முடிவை மாற்றியமைத்தது. "என்னைத் தொல்லை செய்யாதே! என் வீட்டிலேயே இரு. ஆனால், என் காதலை எதிர்பாராதே. அதிலே உனக்கு என்ன சங்கடம்? உனக்கும் தொல்லையில்லை, எனக்கும் தொல்லையில்லை"—இப்படி ஒரு முடிவு. அது நியாயம் போலவும் தோன்றிற்று. அந்த இளங் காதலர்கள் பல்லைக் கடித்துக் கொண்டு பேசுவதன் மூலம் அன்பின் கனத்தை வெளிப்படுத்திக் கொண்டிருந்தார்கள். அவர்கள் வாழப் பிறந்தவர்கள். பாலன் அந்தக் காதலை அலட்சியமாகப் பார்த்தான். "எனக்கும் இப்படி ஒரு அழகான மனைவி இருந்தால் நானும் இப்படிச் சந்தோஷமாகத்தான் இருந்திருப்பேன். அழகான மனைவியைப் பெறக் கூடிய தகுதி எனக்கு இல்லையா என்ன?"—அவன் மாப்பிள்ளை போல் நிமிர்ந்தான். கடற்கரை மணலைக் குவித்துக் குவித்துச் சமப்படுத்தினான். மனம் நினைப்பதைக் கை செய்கிறது. மனதிலே ஒன்றை நினைத்துக் கொண்டு கையால் ஏதாவது செய்து கொண்டிருந்தால், கை அப்படி ஒரு காரியம் செய்கிறது என்ற நினைவே வராது. வரவில்லை பாலனுக்கு. ஒரு இடத்து மண்ணை எடுத்துத்தான் இன்னொரு இடத்து மலையை உண்டாக்கினான். ஒரு மலைக்கு ஒரு மடு. இயற்கையின் மாற்றமுடியாத நியதி. பாலனுக்குப் புதிய எண்ணம் வளர்ந்தது. அதே அளவிற்குப் பழைய காதல் குறைய ஆரம்பித்தது. எழுந்து கொஞ்சதூரம் நடந்தான். அங்கே ஒரு கிழவனும் கிழவியும். அவர்களும் காதலர்கள் போலத்தான் சிரித்துக்கொண்டிருந்தார்கள். "அடேயப்பா! இவர்கள் காதல் எவ்வளவு வருஷங்கள் தாண்டி நிலைத்திருக்கிறது?—உம்....இடையிலே இவளுக்குக் குஷ்டம் வந்திருந்தால் தெரியும்" - பாலன் இப்படித் தன்னைச் சமாதானப்படுத்திக் கொண்டான். மேலும் நடந்தான். அங்கே ஒரு சிறுவனும் சிறுமியும் ஓடியாடி விளையாடிக்கொண்டிருந்தார்கள். "இவர்களுக்கும் ஒருநாள் கலியாணமாகும். இப்போது போலவே உற்சாகமாக விளையாடுவார்கள். உம்....இவளுக்குக் கொடிய நோய் கண்டால் தெரியும்" - பாலன் இந்தச் சிந்தனைக்கும் அந்த முத்திரை போட்டான். பாலனின் இதயத்திலிருந்து இந்திரா முக்கால் திட்டம் கீழே இறங்கி விட்டாள். ஆற்றுவார் இல்லாத அந்த அபலை பாலனின் இதய நாடகம், தன்னை வெகுதூரம் பின்தள்ளிவிட்டது என்பதை அறியமாட்டாள்.

வீட்டிலே நிம்மதியின்றித் தவித்துக்கொண்டிருந்தாள். தான் ஏன் அன்றைக்கே இறந்திருக்கக் கூடாது என்ற ஒரே கேள்விதான் அவள் மனதில் எழுந்துகொண்டிருந்தது. இரவு பதினொரு மணிக்கு பாலன் வீடுதிரும்பினான். இந்திரா சாப்பிட அழைத்தாள். பசியில்லை என்றான். எப்போதும் அருகிலே படுத்து அவளை அணைத்தபடி தூங்கும் அவன், அன்று தனியாகப் படுத்துக் கொண்டான். இந்திரா "ஏன்" என்று கேட்கவில்லை. தமிழ்நாட்டுப் பெண்கள் அதை மட்டும் கேட்கமாட்டார்கள். நாணம் அவர்களது சொத்து. ஆனால் ஏன் தனியாகப் படுக்கிறீர்கள் என்று இந்திரா அவனைக் கேட்காததற்கு நாணமல்ல காரணம். சிரங்கு!- ஆம்! அவள் அப்படித்தான் தெரிந்து வைத்திருந்தாள். தான் ஒருபுறத்தில் பாய்போட்டுத் தனியாகப் படுத்தாள். தூக்கமா வரும்? தூங்குவதுபோல் பாவனை செய்யக்கூட அவள் தயாராயில்லை. விழித்துக்கொண்டேயிருந்தால், கொஞ்சநேரங் கழித்தாவது பாலன் அருகிலே வருவான் என்று கருதினாள். மணி ஒன்றடித்தது. பாலன் நிம்மதியாகத் தூங்கிக்கொண்டிருந்தான். தாள முடியாத இந்திரா மெதுவாக எழுந்து விளக்கை ஏற்றினாள். சத்தம் அவனுக்குக் கேட்கிற அளவுக்கு நடந்தாள். தண்ணீர் முகப்பதுபோல் பானையோடு குவளையை மோதினாள். செருமினாள். அப்போதுதான் பாலன் மெதுவாக விழித்துப் பார்த்தான். "தண்ணீர் வேண்டுமா" என்றாள்! வேண்டாம் என்று தலையாட்டினான். பரிவோடு பக்கத்தில் வந்து, "காலைப்பிடித்து விடட்டுமா?" என்றாள். "இல்லை, தூங்கு" என்று சொல்லவந்தான். அவன் தொண்டை அடைத்தது. அவளது அன்புக் கேள்வியின் வலிமை அவ்வளவு! பதிலை எதிர்பாராமலே இந்திரா அவன் காலடியில் உட்கார்ந்து கால் பிடிக்க ஆரம்பித்தாள். அவன் மனம் இளகத் துவங்கிற்று. சிறிதுநேரம் சென்றது. சூடான இரண்டு கண்ணீர்த் துளிகள் அவன் காலிலே விழுந்தன. அவனது பாராமுகம் பறந்தது. "இந்திரா" என்று அழைத்தபடியே எழுந்தான். அழுதபடியே இருந்தாள் அவள். கண்ணீரைத் துடைத்தான் அவன். "கலங்காதே" என்றான். "யார் என்ன சொன்னார்கள்? எதற்காக அழுகிறாய்? சும்மா இரு" என்றான். பக்கத்திலேயே படுக்க வைத்துக் கொண்டான். இந்திரா அமைதி அடைந்தாள். மிகுந்த கஷ்டப்பட்டு அவளை அணைத்தபடியே படுத்துக் கொண்டான். மணி மூன்றடித்தது. நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்த பாலன் தன் உதடுகளின்மேல் இரண்டு மெல்லிய உதடுகள் தவழ்வதை உணர்ந்தான். சூடான மூச்சு தன் முகத்திலே படிவதை உணர்ந்தான். இரு கரங்கள் வற்றாத பாசத்தோடு தன் தலையை வருடுவதை அறிந்தான். "அதற்குக் கட்டுப்படுவதா? தூக்கத்திலேயே திரும்புவதுபோல், திரும்பிப் படுப்பதா" என்ற குழப்பத்தில் சிறிதுநேரம் இருந்து 'சடக்'கென்று திரும்பிப் படுத்துக்கொண்டான். தூக்கத்தில் புரளுகிறான் என்று எண்ணிய அந்தப் பேதை அவன் கன்னத்தில் கன்னம் வைத்துத் தன்னை மறந்தபடி சாய்ந்திருந்தாள். மனதை இறுகப் பிடித்துக் கொண்டுதான் பாலன் அதையும் சகித்தான். சிறிது நேரத்தில் குப்புறத் திரும்பிப் படுத்துக் கொண்டான். இந்திராவுக்கு அவனது இதயம் தெரியவில்லை. அதனாலே அவள் கலங்கவில்லை.

பொழுது விடிந்தது. எப்போதும் தாமதமாக எழும் பாலன் அன்று சீக்கிரமே எழுந்துவிட்டான். விடியும்பொழுதுதான் தூங்கத் தொடங்கியதால் இந்திரா நிம்மதியாகத் தூங்கிக்கொண்டிருந்தாள். பாலன் சீக்கிரமாகவே குளித்தான். ஒரு சோப்பைக் கரைத்து உடம்பெல்லாம் தேய்த்தான். கொடிய நோய் தன்னைப் பற்றிக் கொள்ளக்கூடாதே என்பதிலே அவ்வளவு அக்கறை அவனுக்கு. நல்ல இதயம் மட்டும் இருந்தால் போதுமா? எல்லாம் இருந்தால்தான் உலகம் மதிக்கும். இந்திராவிடம் நல்ல இதயம் இருந்தது. எழுத்தாளன் பாலனே அதை மதிக்கவில்லை. வேறு யார் மதிப்பார்கள்?

அவள் எழுவதற்கு முன்னாலேயே வெளியேறிவிட்டான் பாலன். பத்து மணிக்கு இந்திரா எழுந்தாள். பாலனைக் காணவில்லை. தன் கடமைகளைச் செய்ய ஆரம்பித்தாள். 'கடிதம்' என்ற சப்தம் கேட்டுத் திரும்பினாள். தபால்காரன் நின்றான். கடிதத்தை வாங்கிப் பிரித்துப் பார்த்தாள். அவள் மனம் ஆனந்தத்தில் திளைத்தது.





மாதவி.....

— 4-ம் பக்கத் தொடர்ச்சி —

முற்பகுதிக் கோவலன் ஒரு காமுகன். பிற்பகுதிக் கோவலனே ஒரு தத்துவஞானி. இவ்வாறு கோவலனை அடிகளார் இருவகைத் தோற்றத்தில் காட்டுகின்றார். முற்பகுதிக் கோவலன் மாதவியால் கண்டது யதார்த்த இன்பம். பின்னரே சிற்றின்பத்தின் சிறுமையினையும், மானிடப் பொய் வாழ்வின் மெய்மையினையும் உணர்ந்து, சென்ற நாட்களிலே செய்த குற்றங்களுக்குப் பரிகாரம் தேடுபவனாய் நல்லதொரு புகழான வாழ்வை வாழ விரும்புகின்றான். இழந்த பொருளை ஈட்ட மனைவியோடு மதுரை சென்றான். எதிர்பாரா வகையிலே அவன் இறப்புக்காளானான். கோவலனுடைய நிலையற்ற சலன உள்ளத்தால் காதலி மாதவியும், மனைவி கண்ணகியும் வரம்பில்லாத் துன்பத்திற்கு ஆளானார்கள்.

கோவலனது குறிப்பறிந்து நடப்பதில் மாதவி பெற்றிருந்த திறமையை அடிகளார் விளக்கிக் கூறும் பகுதி நயமுடைத்து.

"நிலவுப் பயன் கொள்ளும் நெடு
நிலா முற்றத்துக்
கலவியும் புலவியும் காதலற்
களித்தாங்கு
ஆர்வ நெஞ்சமொடு கோவலர்க்
கெதிரி
கோலங்கொண்ட மாதவி"

என்று கூறுகிறார். இதனால் கோவலன் உள்ளத்தில் நிரம்பியிருந்த இளமைத் துடிப்பின்



★ தடியடி தர்பாருக்கு இலக்காகிக் கைதான கம்யூனிஸ்ட் தலைவர் எம். ஆர். வேங்கட்ராமன்.

மிகுதியும், சிற்றின்பவேட்கையும் தெற்றெனெ நமக்குத் தெரிகின்றதன்றோ! கண்ணகியோ குடும்பப் பெண். மாதவியைப் போலக் கலைத் தேர்ச்சியும், வெளி யுலக அநுபவமும் அற்றவள். கோவலன் கலை யார்வம் மிக்கவன். எனவே அவன் கண்ணகிபால் கலையின்பத்தையும் இல்லற இன்பத்தையும் எதிர்பார்த்திருந்ததில் வியப்பொன்றுமில்லையே! கண்ணகியிடம் கவர்ச்சியும், அழகும் இருந்த அளவிற்குக் கலை முதிர்ச்சியில்லை. இல்லற இன்பத்தால் தன் கணவனைத் திருப்தி செய்த கண்ணகி. கலையின்பத்தால் அவனை மகிழ்விக்க முடியாதவளாய்த் தடுமாறினாள். உடலின்பத்தோடு கலையின்பத்தையும் ஒரு சேரக் காண விழைந்த கோவலனுக்குக் கண்ணகிபால் முன்னையது கிடைத்து பின்னையது கிட்டாமல் போகவே, அவள் மேல் அவன் கொண்டிருந்த பற்று, காலப் போக்கில் பழுதாகத் தொடங்கியது. இறுதியில் அது அவனைக் கண்ணகியினின்றும் பிரித்து மாதவிபால் சேர்த்துவிடக் கூடிய அளவிற்கு வன்மைமிக்கதாய் ஆகிவிட்டது. கலைஞனது வாழ்வு குறைவற்ற நிறைவாழ்வாக மாற வேண்டுமானால் வெறும் உடலின்பம் மட்டும் போதுமா? கலைஞன் நாண விழையும் கலையின்பமும் இருந்தாலன்றோ அவ்வாழ்வு நிறை வாழ்வாகத் திகழமுடியும்? அவ்வகையில் கண்ணகி கோவலனால் கைவிடப்பட்டுப் பரிதாபத்திற்குரியவளானாள்.



★ பிப்ரவரி 20-டில்லியிடம் நீதிகோரி முடிக்கிடக்கும் சைனுபஜார்.

கோவலன் எத்தகையவன்? எவ்வகையான உள்ளம்படைத்தவன்? ஏன் தன்னை விரும்பி வந்தான்? என்ற வினாக்களுக்கெல்லாம் ஏற்ற மாற்றமளிக்கும் வகையில் மாதவி திறமையுடன் வாழும்படியான சாதுரியமிக்கவள். கோவலன் என்ன குறிக்கோளுடன் தன்னை வந்து அடைந்தானோ, அந்தக் குறிக்கோளை விளங்கிக்கொண்டவளாய் அதற்கேற்ப அவனை மகிழ்விக்க ஆடியும் பாடியும், யாழ் மீட்டியும், கண்கவர் ஆடை அணிந்தும் அவனை ஆனந்த சாகரத்தில் ஆழ்த்தினாள் மாதவி. அரைக்கணமேனும் தன்னைப் பிரியாதிருக்கும்படி கோவலனை மாதவி ஆட்டிப் படைத்தாள். கயிற்றால் கட்டியிழுக்கப்படும் பொம்மைபோல மாதவியின் காதற்கயிற்றால் கோவலன் மீளா வகையில் கட்டுண்டான். எத்தகைய இன்பமெல்லாம் காண வேண்டுமென விழைந்திருந்தானோ அத்தகைய இன்பமெல்லாம் மாதவிபால் கண்டான் கோவலன். கோவலன் எதிர்பார்க்கும் வகையெல்லாம் மாதவி அவனுக்கு இன்பம் தரக்கூடிய முறையில் அவளது குடியும், குலமும், சமுதாயமும், உலகமும் வாய்ப்பளித்தது. கண்ணகிபால் கலையின்பம் காணாது குறையுற்றிருந்த கோவலனுக்கு. மாதவி எல்லா இன்பங்களையும் அவனுக்கீந்து எல்லையிலா இன்பப் பெருக்கில் ஆழ்த்தினாள். செயலும், சிந்தையும் தடுமாறவே தன் செல்வத்தையெல்லாம் மாதவிபால் நடத்தும் களியாட்டங்களுக்கே செலவிட்டான்.

கவிஞர் இளங்கோ 'கோலங்கொண்ட மாதவி'யென மாதவியை வர்ணிக்கின்ற காரணத்தினால் கோவலனுடைய சபல உள்ளமும், மாதவியினுடைய அறிவுத்திறனும் நமக்குத் தெற்றெனத் தெரிகின்றது. வெளித் தோற்றத்திலும் உடல் வனப்பிலும், சிற்றின்பத்திலும் தீரா வேட்கையுடையவன் கோவலன் என்ற உண்மையினை மாதவி யறிந்திருந்த காரணத்தினால் தான் கலவியின்போது கலைந்து போன உடையையகற்றி, கோவலன் உளங்கவர மீண்டும் வேறு வகையான நல்லுடையோடு அவன்முன் தோற்றமளித்தாள். கழிந்தவுடையில் கண்ட மாதவியினின்றும், புத்துடையால் அலங்கரிக்கப்பட்ட மாதவி கண்கவர் உருவினளாய்த் தோன்றுவதால் மீண்டும் அவள்பால் புத்தின்பம் காண விழைந்தான் கோவலன். இவ்வாறு தன் மட்டற்ற அழகால், மாண்புறு மதியால் மதுவுண்ட வண்டுபோல் கோவலனை மாதவி மயக்கித் தன் வசப்படுத்தியிருந்தாள்.

நிலையற்ற சலன உள்ளங்கொண்டிருந்த காரணத்தால் கோவலன் விருப்பம் எதுவானாலும் அதை எதிர்க்காது மன மகிழ்வுடன் ஏற்றுக்கொண்டாள் மாதவி. கொண்டவொருவனோடு வாழவேண்டும் என்ற தூய கொள்கையையுடையவளான காரணத்தால் கோவலனை எவ்வகையிலும் திருப்தி செய்து வாழ்வதையே மாதவி தன் கடமையாகக் கொண்டிருந்தாள். கோவலனுடைய குன்றனைய செல்வம் குறைந்து போனமைக்கு மாதவியே காரணம் என்று பலர் மாதவிபால் குற்றம் காணலாம். கோவலன் செயலையெல்லாம் தொடக்கத்திலிருந்து ஆழ்ந்து நோக்குவோர்க்கு இது பிழையெனத் தெரியும். கோவலன் வெளிப்பகட்டையும், உடலலங்காரத்தையும் பெரிதும் விரும்பக் கூடியவன். தான் எதிர்நோக்கியிருந்த இன்பம் கண்ணகிபால் கிட்டாமையே கோவலன் அவளைத் துறக்க வேண்டியவனானான். இத்தகைய கோவலன் தன்னையும் துறக்காமல் இருக்கவேண்டுமானால் அவன் விருப்பத்திற்கு மாறாக மாதவி எதுவும் செய்யக்கூடாதவளாக இருந்தாள். மற்ற கணிகையர்போலவன்றி நல்லவொரு குலமகள்போலவே தூய கற்பு வாழ்வை ஒருவனுடன் இருந்து இறுதிவரையில் வாழ்ந்து தன் குலமாசைப் போக்கவேண்டும் என்ற எண்ணத்தைத் தன்னிதயத்தில் ஆழ வைத்திருந்தாள் மாதவி.

தன் வாழ்விற்கும், ஆடை ஆபரணங்களுக்கும் மாதவி கோவலனை எதிர்பார்த்து வாழவேண்டிய நிலையில் இல்லாததால், கோவலன் தன்பால் வருவதற்கு முன்பேயே அளவற்ற நிதியத்திற்குரியவளாய் வாழ்ந்து வந்தாள். இவளது ஆடலை மெச்சிக் கரிகாற் பெருவளத்தானே ஆயிரத்து எண் கழஞ்சு பொன்னைப் பரிசாக அளித்தான். அதோடன்றி விலைமதிக்கொணாத பொன்னரி மாலையினையும் தன் அன்பளிப்பாகக் கொடுத்தான். இவ்வகையில் மாதவி நிறைந்த செல்வவளம் உடையவளாய் கோவலன் தன்னை வந்தடைவதற்கு முன்பேயே வாழ்ந்து வரலானாள். கோவலன் வெளிப்பகட்டையும், புற அழகையும் கண்டு மகிழ வேண்டுமென்ற எண்ணங் கொண்டவன். இயற்கையிலேயே ஒப்பற்ற அழகியாய் விளங்கிய மாதவி இன்னும் செயற்கையழகில் ஈடுபடுத்தப்படுவாளானால் எத்தகைய அழகுத் தேவதையாகக் காணப்படுவாளோ என்ற அற்ப ஆசையானது கோவலன் உள்ளத்திலே நீண்ட நாட்களாக

★ 'தமிழ் எல்லை காக்க உயிர் கொடுக்கவும் தயார்' எனக் கடலூரில் சூளுரைத்த புரட்சிக் கவிஞர்.

இருந்து வந்திருக்க வேண்டும். இல்லையேல், ஏன் மாதவியைப் பொன்னாபரணத்தாலும், பட்டாடைகளாலும் அடிக்கடி அழகுபடுத்தி அதைக் கண்டு அவன் ஆனந்திக்க வேண்டும்? அவனை விரும்பிச் செய்கின்ற இச்செயலை மாதவி தடுத்து நிறுத்த முடியாது. அவ்வாறு கோவலன் தனக்கு அளிப்பதை அவள் ஏற்க மறுப்பாளேயானால் கண்ணகியை எவ்வாறு வெறுத்துக் கைவிட்டானோ, அதேபோன்று தன்னையும் வெறுத்தாலும் வெறுத்து விடுவான் என்ற அச்சம் மாதவியின் மனதிலே இருந்து வந்தது.

— அடுத்த இதழில் முடியும் —

— 1-ம் பக்கத் தொடர்ச்சி —

வந்ததை, மாடிவீட்டுக்குச் சொந்தக்காரர்கள் விழி அகட்டிப்பார்த்து, மூக்கில் விரல்வைத்து நின்றார்கள். கூட்டணி நிலைக்குமா என்று கேலி பேசியோர், 'நான் இல்லாவிட்டால் உருப்படுமா' என்ற அகந்தை நெஞ்சினர், பிப்ரவரி 21-ம் தேதியன்று, கூர்வேல் பாய்ந்தபின் பிடிபட்ட காட்டு விலங்குகளைப்போல தங்கள் தங்கள் இல்லங்களிலே பாதங்களை அழுத்தி நடைபோட்டார்கள். ஆனபயன்? அணைத்த தமிழகம், கிண்டல் குறி கீறலிட எக்களிப்போடு கனைப்பதைக்கேட்டு வீட்டுக் கதவுகளை மூடிக்கொண்டது

தென்னரசு

தான் ஈவு. தமிழ்நாட்டின் எதிர்காலத்தில் ஆதியிலிருந்தே கவலைப்படாதிருப்போருக்கும், தனக்கு முக்கியத்துவம் கிடைக்காததால் இடைக்காலத்தில் தமிழ்நாட்டை மறந்தோர்க்கும் பிப்ரவரி 20 நல்ல பாடம் கற்பித்துக் காட்டியது. காற்றுக்கும கடல்அலைக்கும் பேசும் சக்தி இருந்திருக்குமானால், பிப்ரவரி 20ந் தேதி மாலை சென்னைக் கடற்கரையில் ஒருமித்துக் குவிந்திருந்த தலைநகர்ச் சேனை, டில்லியின் தீர்ப்பை எதிர்த்து எடுத்துக்கொண்ட பிரதிக்ஞையை உலகெங்கும் பரப்பி மண்ணுக்கடியில் புதைந்து கிடக்கும் மண்ணாசைக்காரர்களின் எலும்புக்கூடுகளையும் அதிர்ச்சியினால் ஆட்டம்கொள்ள வைத்திருக்குமேனால், அவரவர் 'சுகபவனங்'களிலே அடைகாத்துக்கிடந்த அமைச்சர்களின் 'கர்ணபேரிகை'களைக் குடையாமலா விட்டிருக்கும்! மணிக்கொரு தடவை மேனியை மினுக்கி மவுண்ட்ரோட்டில் மிதந்து வரும மந்திரிமார்களில், அன்று சென்னையில் இருந்தோர எத்தனை பேரோ? கேவலம்! சென்னை, மந்திரிகளை, மறவர் குலத்துக் கேலிச் சித்திரங்கள், திருமுகத்துக் கரும் புள்ளிகள' என்று தமிழ மக்கள் முடிவு செய்துவிட்டனர்.

சென்னையின இரண்டே இரண்டு இடங்களில் தவிர்த்து அமைதி குலைந்ததாக சென்னையின் 'மொழித்துரோக' தினஇதழ்கள் பிரலாபித்தன. அந்தக் 'கடுகத்தனை' நிகழ்ச்சிக்கும் சர்க்கார்தான் காரணம். 'பொதுவேலை நிறுத்தத்திற்கு சர்க்கார் உதவிசெய்ய முன்வராவிட்டாலும், உபத்திரவமாவது செய்யாதிருந்தால், சென்னையில் அமைதி காக்கும் பொறுப்பை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம்' என்று தமிழ்த் தலைவர்கள் உறுதியளித்திருந்தும், வேலை நிறுத்தம் வெற்றிகரமாக நடைபெறுவதா என்ற தீ நோக்குடன் திமிர் வாதம் பேசி, ஐலண்டு மைதானத்தில் கூடியிருந்த 'சென்னைப் பக்கமாக சர்க்கார் பஸ்களை ஓட்டிய சென்னை அரசியலாருக்கு, உணர்ச்சி வசப்பட்ட வாலிபர் சிலர் ஒரு சிறு அபாய அறிவிப்பைக் காட்டிவிட்டார்கள். அமைதி காக்க வேண்டிய 'காமராஜர் படையினர் அரக்கர்களாயினர். பொது உடமைத் தலைவர்கள் ஜீவா, எம். ஆர். வெங்கட்ராமன் மற்றும் தி மு க.தோழர்கள் அ பொ அரசு, பி ராமசாமி, பசுபதி ஆகியோர் மீது தடிகொண்டு தாக்கினார். 'கலை தோக்காதீர்! வினை அறுக்கப்போகிறா' என்று 'ஐலண்டு மைதானத்துச் சென்னை' எச்சரித்தது. இருபது திங்களாக 'அமைதி அமைதி' என்று தலைவர்கள் போதித்து வந்த 'தாரக மந்திரம்' தான் காமராஜரின் போலீஸ் படையைத் தலைதப்ப வைத்தது என்பதை காமராஜரே உணர்ந்திருக்கக் கூடும. கட்டுப்பாட்டுணர்ச்சியை பலவீனம் என்றுதிரித்துச்சொல்லும்

மனச்சான்றை கொன்றவர்கள்கூட அன்று மாலை பெருமூச்சுவிட்டதாக காங்கிரஸ் பிரபலஸ்தரின் மோட்டார் ஓட்டி நம்மிடம் தெரிவித்தார். 'என்ன இருந்தாலும், தமிழ்நாட்டுத் தலைவர்களுக்கு இருக்கும்செல்வாக்கு அபரிமிதமானதுதான்' என்று அந்தத் தூண்டிமுள் முதலாளி வாய்விட்டுச் சொன்னாராம்! இப்படி, உண்மைகளை விழுங்கிவிட்டு, ஊராள்வோருக்கு ஏற்ற வேடம்போடும் 'பொய்த்துயிர்'க்காரர்கள் தமிழ்நாட்டில் எத்தனை பேரோ? ஐயகோ! தாளமுத்து நடராசா!

★ தென்புலக் காவலன்



★ மக்கள் சக்தியை அவமதித்த மவுண்ட் ரோடு போஸ்ட் ஆபீஸ் நாதியற்றுக் கிடக்கிறது.

உலகநாடுகளில் எங்கெங்கோ போராட்டங்கள் நடைபெற்றிருக்கின்றன. துப்பாக்கிகளை நம்பி தெருக்களில் 'பூட்ஸ்' ஒலியைக் கிளப்பிக்கொண்டிருந்த துருப்புகளுக்குப் போராட்டத்தலைவர்களே பாதுகாப்பளித்ததாக நாம் கேள்விப்பட்டதுகூட இல்லை. பிப்ரவரி இருபதில் தமிழகம் அத்தகைய புனிதச் செயல் புரிந்து அகிலத்தார் எதிரே சாட்சி சொல்ல முன் வந்து விட்டது. 'ஐலண்டு மைதானத்துச் சென்னை' மவுண்ட் ரோடு ரௌண்டாணா வழியாக திருவல்லிக்கேணி கடற்கரைக்கு நகர ஆரம்பித்தது. வழியில் சந்திப்புக்குச்



★ போலீசாரால் தாக்குண்ட கம்யூனிஸ்ட்டுத் தலைவர் ஜீவா

திப்பு சர்வக் கட்சிக் கூட்டணியின் முன்னணி வீரர்களான கே.ஏ. மதியழகன், கா.மு.ஷெரீப், சின்ன அண்ணாமலை, சின்னச்சாமி, கே. விநாயகம், ஜி. உமாபதி ஆகியோர் நின்று அமைதி காக்கும் நற்பணியில் ஈடுபட்டனர். ஆயுதம் தாங்கி நின்ற காக்கிச் சட்டைக்காரர்களை அசையக்கூட அவசியமற்ற நிலையில் தலைவர்கள் ஊர்வலத்தை நடத்திச் சென்றார்கள். 'கிளர்ச்சி எழுந்திருக்கும் சக்திக்கு, அதைக் கிள்ளி எறிந்திட நினைக்கும் காமராசர் சக்தி எம்மாத்திரம்? 'போகிறார்கள் விட்டுவிடுங்கள்,' என்ற தோரணையில் புரட்சித் தலைவர்கள் போலீஸ் படைக்குப் பக்கத்தில் நின்று ஊர்வலத்தினரைச் சமாதானப்படுத்தி அனுப்புவது போலிருந்தது.

மக்கள் தலைவர்களான அறிஞர் அண்ணா, ம. பொ. சி. இரா. நெடுஞ்செழியன், என். வி. நடராசன், எஸ். சி. சி. அந்தோணிப் பிள்ளை, ஜீவா, ஆகியோரும், கூட்டணித் தலைவர் பி. டி. ராசன் அவர்களும் நகரின் எல்லாப் பகுதிகளுக்கும் சென்று தோழர்களை அமைதியாக நடந்து கொள்ளும்படி கேட்டுக் கொண்டார்கள்.

பக்கிங்காம் கர்னாடிக் தொழிற்சாலை, விம்கோ தீப்பெட்டித் தொழிற்சாலை, ஸ்பென்சர் கம்பெனி, மற்றும் பல தொழிற்சாலைகள் கட்டுப்பாடாக வேலைநிறுத்தம் செய்து நேரு சர்க்காரையும், காமராசர் சர்க்காரையும் இடித்துக்காட்டின. ஆள் ஏறாவிட்டாலும் பரவாயில்லை, வீம்புக்காகவாவது பஸ்களை ஓட்டித் தீருவதென முடிவு செய்திருந்த சென்னை அரசுகூட பிற்பகல் ஒரு மணிக்குப் பிறகு வெள்ளம் போல் திரண்டிருந்த மக்களை ஊடுருவிக்கொண்டு மவுண்ட் ரோட்டில் மோட்டார்களைச் செலுத்தமுடியவில்லை. வெட்கம்! வெட்கம்!! அந்த ஆத்திரத்தில்தான் - அவர்கள் அமைதியாக இருந்தும் போக்குவரத்துச் சரிவர இயங்கவில்லையே என்ற வயிற்றெரிச்சலில் தான், காருண்ய சீலர்கள் கண்ணீர்ப்புகைக் குண்டுவீச்சு நடத்தி, தலைவர்களில் இரண்டொருவரையும் தடிகொண்டு தாக்கினர் போலும்! இந்த லெட்சணத்தில் 'பச்சைத் தமிழர் ஆட்சி' என்ற பட்டுக் குஞ்சம் வேறு! சென்னை நகரில் மட்டுமா போலீஸ் தலைவிரி கோலமாக ஆடியது? கள்ளக்குறிச்சியிலும் சேலத்திலும் துப்பாக்கிப் பிரயோகம் வேறு செய்திருக்கிறார்கள், வெள்ளைக்காரனுக்கு 'வெறியன்' என்று பட்டங் கொடுத்த 'தன்னை மறந்தவர்'கள். தமிழகமெங்கணும் மொத்தம் எண்ணூறுக்கு மேற்பட்ட தோழர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். நமது, சட்டசபை வெற்றிமுரசு தோழர் ஏ. கோவிந்தசாமி எம். எல் ஏ., சோணாட்டுச் செம்மல் என். எஸ் இளங்கோ, திருச்சி எம். எஸ் மணி, அம்பில் தர்மலிங்கம் ஆகியோரும், கொங்கு நாட்டுச் செயல்வீரர் கோவை ராஜமாணிக்கமும், கடலூர் சாம்பசிவமும், தலைநகரில் நகரசபை உறுப்பினர், நமது முனுசாமியும், அலமேலு - அப்பாதுரை அவர்களும், சரோஜினி அம்மையாரும், அரக்கோணத்தில், அடலேறு ஏ. எல். சி. கிருஷ்ணசாமியும் இன்னும் பலரும் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். சென்னையில் ஜீவாவும், எம் ஆர். வெங்கட்ராமனும் கைது செய்யப்பட்டு விடுதலை பெற்றனர். இத்தனை கொடுமைகளையும் புரிந்துவிட்டு ஒருசிலர் மீது வழக்கும் தொடுத்திருக்கிறார்கள் தேசமாளும் 'தர்மசீலர்'கள்.

தமிழ்மக்கள் தாயகத்தின்பால் எவ்வளவு பற்றுதலும் தலைவர்களிடத்தில் எத்துணை அன்பும் கொண்டிருக்கிறார்கள் என்பதை பிப்ரவரி 20ம் தேதி உறுதியெடுக்கக் கடற்கரையில் கூடிய மக்கள் சக்தி, ஆணவக்காரர்களின் இதயங்களில் அறைந்து காட்டியது. இவ்வளவு பெரிய ஜனசமுத்திரத்தைக் கட்டிக்காக்கும் மக்க

— 6-ம் பக்கம் —

வடநாட்டில்...

— 2-ம் பக்கத் தொடர்ச்சி —

பொருந்தியதாகவும், போடுவதற்குச் சிலாக்கியமாகவும் உள்ளது. சமீருகத் திரித்தால் கடலிலே புழங்கப்படுவதிலே நிகரற்றதெனக் கப்பல் தொழிலில் பெரிதும் பயன்படுத்தப்படுகிறது.

அமெரிக்கக் கண்காட்சியிலே என்னைக் கவர்ந்தது இயந்திரங்களுக்குப் பயன்படுத்தப்படும் "பால்சு" (பால்ரஸ் என்று கூறுவதுண்டு) களைச் சோதித்தறியும் கருவியேயாகும். இக்கருவி, எந்த விதத்திலாவது, உருவம், எடை, பளபளப்பு, உலோகக் கலவை, முதலானவற்றில் உருண்டைகள் தவறியிருந்தால் அவைகளைத் தானுகவேயே வெளியேற்றி விடுகிறது.

மண்ணிலும், கல்லிலும் எந்த எந்த உலோகப் பொருள்கள் எவ்வளவு கலந்திருக்கின்றன என்பதையறிய ரஷிய நாட்டினரின் கண்டுபிடிப்பு அபாரமானதாகும். இப்பெட்டியில் கல்லைவைத்து மின் ஓட்டத்தைச் செலுத்தினுல் நிற வேறுபாடுகள் வெளிப்படுத்தப்படுகின்றன. ஒவ்வொரு நிறமும் ஒவ்வொரு உலோகத்தினின்று வருவதாகும் அவைகளின் அளவைக் காண அதிலேயே வசதி செய்து தரப்பட்டுள்ளது. அதன் மூலம் எல்லாவற்றையும் அறியலாம்.

இந்தியாவைப் பொறுத்தமட்டில் ஏராளமான காட்சி நிலையங்கள் இருந்தன. முன்னேற்றத்தைக் குறிக்கும் இடத்தில் குறிப்பிடத் தக்கதென இரண்டு. ஒன்று "கடலூர் சால்ட் பாக்டரி" மற்றையது "கண்டாலா சால்ட் ஒர்க்ஸ்" முன்னையதின் மாதிரியில் ஒரு குடிசை. பக்கத்திலேயே ஏற்ற மரமும் வாய்க்காலும். தொடர்ந்து உப்பளங்கள், இதுதான் "பாக்டரி" யின் மாடல். மற்றையது, முன்னையதைவிடப் பன்மடங்கு இடத்திலே அமைக்கப்பட்டுள்ள ஒரு சில பெரும் கட்டிடங்கள். அதனுள்ளேயும் வெளியேயுமிருக்கும் பெரும் பெரும் இயந்திரங்கள். இவ்விரண்டு இடத்திலேயும் உப்பு தயாரிக்கிருர்களாம். உண்மையிலேயே கூறவேண்டுமானுல், உப்பைத் தின்று வாழ்பவராக நாம் இல்லாததாலேயே இவ்வேற்றுமையும் வேதனை தரும் விளக்கங்களும். அதைக் கண்டு வியந்து செல்லும் நம் மக்களும்.

அனுமதி கிடைத்துவிட்டதால் ஒருநாள் மாலை நங்கல் செல்லத் தயாரானேம். டில்லியிலிருந்து நங்கல் 220 மைல் தொலைவில் உள்ளது. பானிப்பட் வழியாகச் செல்லவேண்டும். இரவு புறப்பட்டு மறுநாட் காலை நங்கல் வந்தடைந்தோம். நங்கல் கால்வாயை முதலில் சென்று பார்த்தோம். அங்கு பொறி இயல் வல்லுநர் ஒருவர் எல்லாவறறையும் விளக்கிக் கூறினர். உழவுத் தண்ணீருக்கான முறையிலேயே கால்வாய் திறக்கப் பட்டாலும் அது வேறு முறையில் பயன்படுத்தப்படுகிறது. மின் ஓட்டச் சக்தியையே பெரிதாக எண்ணுவதால் அதற்கே தண்ணீரை உபயோகிக்கிருர்கள். அதுவும் ஆறு மிகவுஞ் சிறிதாகவும், தண்ணீரில் லாமலுமிருப்பதால் பகல் முழுதும் தேக்கி இரவிலேயே திறக்கப்படுகிறது. சில வேளைகளில் இரண்டு நாள் மூன்று நாட்களுக்குக்கூடக் காத்திருப்பார்களாம். அவ்வளவு நீர்வளம் கொண்டது அந்த சட்லெஜ் நதி. அணையின் இருப்பிடம் கல்தரையில்லை. உறுதியான நிலமில்லாத காரணத்தால் தரைமட்டத்திற்குக்கிழ் 75 அடி தோண்டி அதில் காங்ரீட் போட்டுள்ளனர். மட்டத்திலிருந்து சுமார் 60 அடிக்கு மேல் அணையிருக்கிறது. பொதுவாக 50 அடித் தண்ணீர் தேக்க முடியும். இருந்தும் 30 அடித் தண்ணீரே கட்டமுடிகிறது. உறுதியான தரையில்லாத காரணத்தால் அதிக உயரம் நீர் ஏறும்போது அமுக்கும் சக்தியும் மிகும். இப்போது

'சிமெண்கள்' எனப்படும் புறைகளின் வழியே தண்ணீர் பிதுந்து பீறிட்டு எங்காவது ஓரிடம் வெளிப்படும் இதை எளிதில் கண்டுபிடிக்க இயலாது.

இதை முடித்துக்கொண்டு பக்ரா சென்ருேம். ஈட்டி எட்டிய மட்டும், பணம் பாசுானம் மட்டும் எனபதன் உண்மையைக் காண வேண்டுமென்ருல் பக்ராதான் செல்ல வேண்டும். இங்கும் முன் சொல்லியதேபோல் உறுதியற்ற கெட்டிப் பாறையே இல்லாத மணல்கலந்த மலைப்பிரதேசமே காணக்கிடக்கிறது. மலையில் காட்டுவளமே இல்லை. மழையிருந்தால் தானே. போகட்டும். நதியில் நீர்வளம் அதுவுமில்லை பின் என்னதான் உண்டு? கோடையில் பனி உருகிப் பெருகும் வெள்ளம் மட்டுமே நதியின் உயிர்நாடி. அதுவும் நாலு மாதங்களுக்கேயாம். இதனுல்தான் இரு மலைகளுக்கிடையே இவ்வணை கட்டப்படுகிறது. 500 அடி உயரமுள்ள அணையாக இது கட்டப்பெறும். ஏறத்தாழ 400 அல்லது 500 அடித் தண்ணீராவது தேக்கலாம். தேக்கம் இல்லாவிட்டால் தண்ணீரே கிடையாதே. இவ்விடத்தில் புறையோடுவது மிகவும் எளிதானதாகும். இங்குள்ள மண் உவர் கண்ட இடத்துச் சுவர் மண் மாதிரியாகப் பிடிப்பில்லாமல் பொல பொலவென்றிருக்கிறது. 50 அடிக் குறுக்களவுள்ள குகை இரண்டு (ஒவ்வொன்றும் அரை மைல் நீளம்) குடைந்து அதன் உட்சுவரைக் காங்ரீட்டால் பூசி முடிக்க மட்டும் ரூபாய் 4 கோடி செலவிடப்பட்டுள்ளது.

அன்று மாலையே டில்லிக்குத் திரும்பினேம். டில்லியில் ஒருவாரம் தங்கியிருந்தோம். எங்கள் பத்து நாள் ஓய்வு ஒருவழியாக முடிவுற்றது. பனிரெண்டாம் நாள் மாலை சென்னை சேர்ந்தோம்.

அன்பழைப்பு

29-2-56ல் நகர மன்றத் தலைவர் திரு. பெருமாள் அவர்கள் தலைமையில், அறிஞர் அண்ணு அவர்களின் வாழ்த்துரையுடன் நடக்க இருக்கும் எங்கள் திருமண விழாவிற்குத் தங்கள் வருகையை விழைகிறேம்

கா. வே. முருகேசன்
எல்லம்மாள்

இடம் :
6, விளக்கடி வீதி, காஞ்சிபுரம்

கன்னி எடுத்த கனி !

அது ஒரு மலர்க்காடு......அதிலே பலவித வண்ணப் பூக்கள் பூக்கும் செடிகள்-கொடிகள் நிறைந்திருந்தன. பழந்தரும் மரங்களாகிய மா, பலா, நாவல் முதலியவும் அந்தச் சோலையிலே இருந்தன. கொடிகளும் செடிகளும் பூக்களைச் சுமந்து அமைதியோடிருந்தன. மரங்களிலுள்ள இலைகள் பச்சை வண்ணத்தைப் பரப்பிய வண்ணம் தென்றலோடு சேர்ந்து ஆடின. மரங்களில் பூத்துள்ள பூக்கள் அந்திக் கதிரவனின் தங்க ஒளிக் கதிர்கள் பட்டுப் பொன்னணிகளாக ஒளி வீசின !

மரங்களுக்கு இடை இடையே மலர்ச் செடிகளின் புதர்கள் நிறைந்திருந்தன. மலர் சூடிய மங்கைகள், கூட்டம் கூட்டமாக நின்று ஏதோ பேசிக் கொண்டிருப்பதுபோல அவை காண்பதற்கு விருந்தாய் அமைந்திருந்தன. மலர்கள் வான வில்லில் அமையப் பெருத புதுப்புது வண்ணங்களைப் பெற்று மிளிர்ந்தன! 'தான் வானத்திலே தோன்றினுல் எங்கு தன்னழகு இப்பூக்களால் மங்கி விடுமோ' என்று நினைத்ததோ என்னவோ 'வானத்தில் வான்வில் அமையவில்லை. அம்மட்டோ? இளமலர்களின் மணம் தென்றலோடு சேர்ந்தது. வாசனையை வாரி வாரி வழங்கிச் கொண்டேயிருந்தது தென்றல்-தமிழ் நாட்டுக் கடையெழுவள்ளல்களைப் போல !

அம்மலர்க் காவிலே ஒரு நாவல் மரம். அதைச் சுற்றிலும் பூப்புதர்கள்...ஆம்...மலர்க்காடு! ஆனுல் அங்கே தென்றல் வீசவில்லை! மாருக மணமே வீசியது! அங்கு கன்னங் கரிய வண்டுகளே இருந்தன. மலர்ப் பெண்கள், வா,வா' எனத் தலையசைத்து மேலும் மணத்தைத் தூதாக அனுப்பி வண்டுக் காதலர்களை வரவழைத்தன

ஒவ்வொரு வண்டும் ஒவ்வொரு மலரில்' வாழ்வின் உச்சியை அடைந்ததாக அவைகளின் நினைவு! ரீங்கார ஓசையை-இசையை இசைத்துக் கொண்டே தேனை மொண்டு மொண்டு குடித்தன! மது மயக்கத்தில் அவைகள் பாடிய பாடல்கள்! ஆடிய ஆட்டங்கள்......! அப்பப்பா! பசி மறைந்தால் ஆடல், பாடல்கள்! பசி யிருந்தால்......! உலகமே இப்படித்தான் !

மதுவுண்ட மயக்கம். வண்டுகள் சுருண்டு விழுந்து கிடந்தன. இன்பப் போதையிலே இறுமாந்து கிடந்தன! சோலையின் பாதையில் கருநாவற் பழங்களேன விழுந்து கிடந்தன. மோனம் நிலவியது சிற்சில இடங்களில்! எங்கோ சில வண்டுகள் காலங் கடந்து வந்து மலரோடு கெஞ்சிக் கிடந்தன! இன்பம் பெற விரும்பி அவ் வண்டுகள் எதை எதையோ பாட்டாக இசைத்துக் காட்டின... ஆனுல் மலர்ப் பெண்களோ, நேரம் கழித்து வந்ததற்காக வண்டுகளோடு ஊடலாடின !

சோலையின் வழியே ஒரு நங்கை அங்கு வந்தாள். தன் காதலனைக் காணும் ஆவலால். அவள் புள்ளி மானெனத் துள்ளிக் குதித்து வந்தாள். அன்றலர்ந்த ரோஜாவை விட மலர்ச்சி பெற்றிருந்தாள். அழகைச் சுமந்து வந்தாள்! காண்பவர் உள்ளத்திலே 'சலன'த்தை உண்டாக்கும் கன்னி அவள். சாலையில் நடந்து வரும்போது காலில் ஏதோ தட்டுப்படவே குனிந்தாள். அவளின் வளைவு 'வானவில்'லாய்த் தோற்றியது! மின்னல் மின்னியது போலானது' அவள் காலில் தட்டுப் பட்டதோ ஒரு நாவற்பழம்... இல்லை...கருவண்டு. ஆம் மது மயக்கத்திலே கிடந்த வண்டு.

வண்டு, மயக்கம் நீங்கிக் கண்களைத் திறந்தது. அழகியின் முகத்தை நோக்கியது மங்கையின் மலர் முகம் வானத்து 'முழு நிலா'வாகத் தோன்றியது. தான் இருக்குமிடத்தை-அவள் கையை 'தாமரை மல'ரெனக் கருதியது கைத் 'தாமரை'யில், விரல் 'இதழ்கள்' சூழ, தான் இருப்பதாக உணரவில்லை உண்மையிலேயே 'கமல' மலர் எனக் கருதியது வண்டு. மேலே வானத்து முழு நிலா......இருக்கும் இடமோ தாமரை மலர். முழுமதி வந்தால் தாமரை மலர் குவியும் என்பது அதற்குத் தெரியாத ஒன்று? வண்டு அச்சத்தால் பறந்தது' நங்கைக்கோ ஐயம்!" பறந்து சென்றது வண்டா? பழமா?" என அவள் வாய் முணு முணுத்தது! இப்புதுமையை இதுவரை காணுதவள், திகைப்பின் மேலீட்டால் நின்ருள்!

இதோ பாடல் !: —

"தேனுகர்வண்டு மதுதனையுண்டு தியங்கியே கிடந்ததைக்
கண்டு
தானதைச் சம்புவின் கனியென்று தடங்கையா லெடுத்து
முன்பார்க்க
வானுறுமதியம் வந்ததென் றெண்ணிமலர்க்கரம் குவியு
மென்றஞ்சிப்
போனது வண்டோ பறந்தது பழந்தான் புதுமையோ
விதுவெனப் புகன்ருள்"

— விவேக சிந்தாமணி.

— "மாணிக்கம்-முத்து"

23. கூடிக் கெடுப்பார் குணம்

வெண்பாப் போட்டி 23-ன் பரிசுபெற்ற வெண்பாவையும், ஏனைய தகுதியுடைய வெண்பாக்கள் சிலவற்றையும் சென்ற இதழில் வெளியிட்டோம். இந்த இதழில் மேலும் சில தகுதியுடைய வெண்பாக்களை வெளியிட்டுள்ளோம்.

நல்லவர்போல் தான்நடிப்பர், நாவினிக்கப் பேசிடுவர்
பொல்லாங்கு தானுரைப்பர் பின்னேகி-பிள்ளாய்கேள்
தேடிவந்து தண்டமிட்டுத் தாள்தொழுவர், ஈதெல்லாம்
கூடிக் கெடுப்பார் குணம்.

—ஆ. வி. நாதன், கோவை.

★

நற்றமிழாம் தேமொழியை நாவினிக்கக் கற்றபின்னர்
சொந்தமொழி வாழ்வெய்தச் சூழ்ச்சிமிக்கார்-செந்தமிழில்
நாடியதோர் நெஞ்சுடனே நஞ்சொத்த சொற்கலத்தல்
கூடிக் கெடுப்பார் குணம்.

—சுப. மணிமொழியன், அண்ணாமலைநகர்.

★

சீர்திருத்தக் காரனென்று சிம்மக் குரலெழுப்பிப்
பார்முழுதும் போற்றப் பசப்பிவிட்டு-நேர்மையின்றி
ஓடிச் சிலைகளினை உள்ளன்பாய்க் கும்பிடலே
கூடிக் கெடுப்பார் குணம்.

—கே. பி. ஜோதி, சாலிச்சந்தை.

★

தேனொழுகப் பேசிடுவார் தேர்ந்தநடிப் பேயுடையார்
தானெடுக்க முடையார்போற் றாழ்ந்திடுவார்-மானமொடு
பாடிப் புகழ்பூண்ட பைந்தமிழில் ஆரியம்போல்
கூடிக் கெடுப்பார் குணம்.

—வீர. அவையரசு, உம்பளச்சேரி.

★

நெஞ்சினில் நஞ்சூறும் நீர்வாத்த முத்துவிழும்
வஞ்சத்துக் 'கோமானின்' வாயெல்லாம்-மிஞ்சிடுந்தேன்!
நாட்டமிக உள்ளார் நடித்திடுவர் நம்கலத்தில்,
கூடிக் கெடுப்பார் குணம்.

—வானம்பாடி, முசிறி.

★

செங்கோலர் ஆட்சிக்குச் சீர்கேடு ஆக்கிடுவர்
வெங்கோலர் பீடத்தை வாழ்த்திடுவர்-வங்கணத்தால்
கூடியே வெம்பகையைக் கூட்டிடுவர், மூந்நூலோர்
கூடிக் கெடுப்பார் குணம்.

—அன்பிநெளி, கட்டிமேடு.

★

நன்மை புரிதற் றடுப்பதூஉம் நன்மைகள்
இன்மை புரிதற் கெடுப்பதூஉம்-அண்மையில்
ஓடி முகத்துதி யோதலும் இம்மூன்றும்
கூடிக் கெடுப்பார் குணம்.

—டாக்டர் எஸ். வாசுதேவனுர், திருநள்ளாறு.

★

தேவிகுளம் பீர்மேடு தீந்தமிழர்க் கில்லையெனப்
பாவியவர் பார்த்திருந்து பைந்தமிழ்த்-தேவிதுயர்
காடித் துடையார் நமக்கென்ன வென்றிருத்தல்
கூடிக் கெடுப்பார் குணம்.

—ஆ. முருகேசன், பா. நா. பாளையம்.

★

கண்ணடி தண்ணியதே; கடுஞ்சுடரைக் கூடியபின்
கண்கரிக்கச் செய்திடுமால் கொடிதாமே-ஒண்டொடிகேள்
தேடிப் பகைமுடித்துத் தீயருப சாந்தகரைக்
கூடிக் கெடுப்பார் குணம்.

—புத்தரசு, பம்பாய்.

கொஞ்சும் தமிழ்மொழிக்கும் நாட்டிற்கும் கேடளிக்க
விஞ்சுகின்றார் வஞ்சகர்தாம் வண்டமிழீர்!-கொஞ்சுதல்போல்
நாடிடுவார் நம்பாதீர்! நச்சுப்பல் காட்டிநமைக்
கூடிக் கெடுப்பார் குணம்.

—தமிழ்த்தேவன், வேலூர்.

★

நீடித்த நல்லுறவால் நல்லோராய்த் தான்நடித்து
பேடித் தனமாகப் பாரினிலே-நாடியதோர்
நாடில்லாக் கொள்கையினைச் சாடியே கொக்கரித்தல்
கூடிக் கெடுப்பார் குணம்.

—கோ. தருமராசன், தரங்கம்பாடி.

★

நெஞ்சாரப் பாடுபட்டு நெஞ்சே தமரோடு
எஞ்சாமல் பார்த்துண்டு எக்காலும்-துஞ்சாமல்
தேடிப் பலகற்ற தென்புடையார்க் கென்செய்யும்
கூடிக் கெடுப்பார் குணம்.

—ஜி. கந்தசாமி, கேர்பேன், கோத்தகிரி.

★

தேன்சுரக்கப் பேசிடுதல் தேவையின்றிக் கும்பிடுதல்
வான்புகழ்ச்சி கூறி மகிழ்வித்தல்-தோன்றுபல
வேடிக்கை செய்து வியப்பூட்ட லிக்கான்கும்
கூடிக் கெடுப்பார் குணம்.

—பெ. ராமையா, பேரையூர்.

★

பற்றிப் படரத் துணைகொண்ட நல்மரத்தைச்
சுற்றித் தரங்கெடுக்கும் செங்கொடிதான்-மற்றதுபோல்
நாடித் தலைமைகொள நல்லோரை ஏசலெல்லாம்
கூடிக் கெடுப்பார் குணம்.

—முருகு, வரகூர்.

★

கூடி மகிழ்வதுபோல் கொள்கை மதுவருந்தி
நாடியே வந்திடுவர் நல்லவர்போல்-பாடியே
சாடித் திரிந்திடும சண்டாளர் பெற்றதெலாம்
கூடிக் கெடுப்டார் குணம்.

—அ. கா. காளியண்ணன், தருமபுரம்.

★

நாடிப் பணிந்து நலத்தினைப் பேணிப்பின்
ஊடிக் குணத்தை வளர்க்காமற்-சோடித்து
ஆடிப் பரத்தையர் அங்கத்தைக்-காட்டி நம்மைக்
கூடிக் கெடுப்பார் குணம்!

—க. மு. சிதம்பரம், திருவையாறு.

★

கற்ற வழிநில்லார்; காதல் மொழிபேசி
உற்றார் உயிர்க்கும் உலைவைப்பர்;-மற்றவரும்
'ஆடு நனைய அழுத ஓநா'யொப்பர்
கூடிக் கெடுப்பார் குணம்.

—த. பழனியப்பன், அண்ணாமலைநகர்.

★

இழைந்து பழகி இளித்துப் பசப்பி
குழைந்து கெடுப்பார் குடியை!-வளைந்துபடம்
ஆடிக் கடிக்கும் அரவுதான் நண்பரெனக்
கூடிக் கெடுப்பார் குணம்.

—க. ராமசாமி, பொறையார்.

★

தென்னாட்டின் செல்வங்கள் தேவிகுளம் பீர்மேட்டைத்
துண்டித்து விட்டார் துரோகிகள்! நன்னீதி
ஓடிட வைத்ததுவும், ஓரவஞ்சம் செய்ததுவும்
கூடிக் கெடுப்பார் குணம்!

—கி. கண்ணன், அகரப்பேட்டை.

★

கண்ணடி மென்கன்னம் காணப் பொலிவோடு
தண்ணகப் பொன்மேனி தான்கொண்டு-மண்மீதில்
ஆடி மயக்கும் அழகுதனைக் கொண்டதெலாம்
கூடிக் கெடுப்பார் குணம்.

—சாமி. பாண்டுரங்கம், பட்டத்தையன்குட்டை.

ஆசிரியர், அச்சிடுபவர், வெளியிடுபவர் கண்ணதாசன், ஏ. எம். எஸ். அச்சகம், 2-127, மவுண்ட் ரோடு, சென்னை-6.